Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, JULY 31, 2023

திங்கட்கிழமை 31, ஜூலை 2023 | ஒளி: 09 கதிர்: 051 | பக்கம்: 07 | நகரப்பதிப்பு | FREE

## சட்டவிரோத கருத்தரிப்பு அதிகரிப்பு



நாடளாவிய ரீதியில் சட்டவிரோதமாக கருத்தரிப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. இவ்வாறு கருத்தரிப்போரில் கூடுதலானவர்கள், திருமணம் முடிக்காதவர்கள் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## "பிள்ளை வரம் கேட்டன்; மாதா தரவில்லை"

### மாதா சொரூபங்களை சேதப்படுத்தியவர் வாக்குமூலம்

எம். றொசாந்த்

"மாதாவிடம் நேர்த்தி வைத்தும் பிள்ளை கிடைக்கவில்லை. அந்த விரக்தியிலேயே மாதா சிலைகளை சேதப்படுத்தினேன்" என, மாதா சொரூபங்களை சேதப்படுத்திய குற்றச்சாட்டில் கைதான சந்தேகநபர் தெரிவித்துள்ளார்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவில் ஆறுக்கு மேற்பட்ட இடங்களில் மாதா சொரூபங்கள் வெள்ளிக்கிழமை (28) அதிகாலையில் சேதப்படுத்தப்பட்டிருந்தன. அது தொடர்பில் தீவிர விசாரணைகளை முன்னெடுத்த மானிப்பாய் பொலிஸார், சுதுமலை தெற்கு, சாவல்காடு பகுதியை சேர்ந்த 32 வயதான ஒருவரை கைது செய்தனர்.

தொடர்ச்சி P2

"இன்னும் ஐந்து வருடங்களில்

# அந்த நிலை உருவாகும்"

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பெரும்பாலான பீடங்கள், பெரும்பான்மை இனத்தவர்களின் கைகளுக்கு சென்றுள்ள நிலையில், இன்னும் ஐந்து வருடங்கள் சென்றால் வடக்கு மாகாணம் தமிழர்களின் மாகாணமா எனக் கேட்கும் நிலைக்கு மாறிவிடும் என யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வேந்தரும் தகைசார் பேராசிரியருமான எஸ். பத்மநாதன் தெரிவித்தார்.




யாழ்ப்பாணம், திருநெல்வேலி பகுதியில் அமைந்துள்ள பிரபல தனியார் விருந்தினர் விடுதியில் சனிக்கிழமை (29) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீடத்தை தவிர, ஏனைய பீடங்கள் பெரும்பான்மை இனத்துடையவையாக மாறியது போல், வடக்கு மாகாணமும் தமிழர்களின் தனித்துவமான அடையாளத்தில் இருந்து மாறக்கூடிய வகையில் ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

"தமிழ் மக்களுடைய மொழி, கலாசாரம், பண்பாடு ஆகிய பாதுகாக்கப்பட வேண்டுமானால் வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்" என்றார்.

தொடர்ச்சி P2



## ஒருசில தமிழ் எம்.பிக்களை சந்திக்கிறார் உயர்ஸ்தானிகர்

இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே மற்றும் தமிழ்க் கட்சி எம்.பிக்களுக்கு இடையில் செவ்வாய்க்கிழமை (01) சந்திப்பொன்று இடம்பெறவுள்ளதாக அறியமுடிகின்றது.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், சுமந்திரன், சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், சாணக்கியன், கலையரசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

மேலும், டெலோ கட்சி சார்பாக செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தம் கருணாகரன், வினோ நோகராதலிங்கம், புளொட் தலைவர் சித்தார்த்தனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

தொடர்ச்சி P2

## ஓமந்தை விபத்தில் சாரதி பலி; சாரதி காயம்




யாழ்ப்பாணம்-கண்டி (ஏ9) பிரதான வீதியில் வவுனியா, ஓமந்தை பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை (30) அதிகாலை 1.30 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கெப் வண்டி மற்றும் உழவு இயந்திரத்தில் லொறியொன்று மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## இப்படியும் நடக்கிறது

எம்.யூ.எம் சனூன்

பொது சுகாதார பரிசோதகர்களின் (PHI) பெயரைப் பயன்படுத்தி நடைபெறும் பண மோசடி தொடர்பான தகவல், புத்தளம் ஐக்கிய வர்த்தக நலன்புரிச் சங்கத்துக்கு கிடைத்துள்ளது.

இவ்வாறான மோசடிகளிலிருந்து பொது மக்களையும் குறிப்பாக வர்த்தக வியாபாரிகளையும் பாதுகாப்பதற்காக வர்த்தக சங்கம், பொதுமக்களுக்கு பல்வேறு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

தொடர்ச்சி P2




முதலாம் குறுக்குத்தெரு, சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தானத்தின் ஆடிவேல் தேர்த்திருவிழா ஞாயிற்றுக்கிழமை (30) ஆரம்பமானது. காலி முகத்திடலுக்கு முன்பாக, தேர் தரித்து நின்றபோது...



## ஸ்டாலின்- ஜீவன் சந்தித்துப் பேச்சு

### மலையக பெருந்தோட்ட மக்களின் மேம்பாட்டுக்கு தமிழக அரசாங்கத்தின் பங்களிப்பு அவசியம்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமானுக்கும் தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலினுக்கும் இடையிலான சந்திப்பு சனிக்கிழமை (29) காலை இடம்பெற்றுள்ளது.

தமிழக முதலமைச்சரின் இல்லத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், மலையக பெருந்தோட்ட மக்களின் மேம்பாட்டுக்கு தமிழக அரசாங்கத்தின் பங்களிப்பு அவசியம் என நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இலங்கை-இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பின் போது, சென்னையிலுள்ள இலங்கை துணைத் தூதுவர் டி. வெங்கடேஸ்வரன் உள்ளிட்ட அதிகாரிகளும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.



## 'மாண்புமிகு மலையக' பேரணி முருங்கனை நோக்கி பயணமாகும்

எஸ்.றொசேரியன் லெம்பேட்

மலையக எழுச்சி பயணத்தின் மூன்றாவது நாளான ஞாயிற்றுக்கிழமை (30) பேசாலை, வெற்றிநாயகி தேவாலயத்தில் ஆரம்பமான எழுச்சிப் பயணம் மன்னாரை வந்தடைந்தது.

மூன்றாவது நாளான ஞாயிற்றுக்கிழமை (30) காலை 6.30 மணியளவில் பேசாலை, வெற்றிநாயகி தேவாலயத்தில் சர்வமத தலைவர்களின் ஆசியுடன் எழுச்சிப் பயணம் மன்னார் நகரை நோக்கி ஆரம்பமானது.

தொடர்ச்சி P2



## "வாய்ப்புகள் இல்லை"

தற்போதைய நிலையில் இந்த அரசாங்கத்தால் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான வாய்ப்புகள் இல்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

"அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம்தான் இறுதித் தீர்வா" என்று ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"அரசியலமைப்பின் 13ஆம் திருத்தம்தான் இறுதித் தீர்வென எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நான் கூறவில்லை. தற்போதைய நிலைமையில், புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான சூழல் இல்லை. எனவே இருக்கின்ற அதிகாரங்களைக்கொண்டு, தற்காலிகத் தீர்வை வழங்குவதே நோக்கமாகும்" என்றார்.

தமிழ்க் கட்சிகளின் கோரிக்கைக்கு அமைவாக, அதிகாரப் பகிர்வை வழங்குவதற்கு நான் சம்மதம் தெரிவித்தாலும் பாராளுமன்றமே இறுதி முடிவை எடுக்க வேண்டும் என்றார்.

## தகவல் அறியும் சட்டத்தால் அநேகமானோருக்கு நன்மை

ஏ.எச்.ஏ. ஹுஸைன்

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தால் மூவின மக்களும் மிகுந்த நன்மை அடைந்துள்ளதால் அதனை இன்னமும் காத்திரமாக எடுத்துச் சென்று, மக்களை விழிப்படைய வைக்க வேண்டுமென காணி உரிமைகளுக்கான மக்கள் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண இணைப்பாளரும் மனித எழுச்சி அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான கே. நிஹால் அஹமட் தெரிவித்தார்.



மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகவும் அவற்றுக்கு சாத்தியமான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கிலும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் சம்பந்தமான விழிப்புணர்வூட்டல் செயலமர்வு அட்டாளைச்சேனையிலுள்ள மனித எழுச்சி அமைப்பு அலுவலகத்தில் ஞாயிறன்று (30) நடைபெற்றது.

தொடர்ச்சி P2

## உழவு இயந்திரம் விபத்து; சாரதி பலி, மூவர் தப்பினர்

கௌசல்யா, ஆர். ரமேஸ்


பத்தனை, மவுனட்வேனன் தோட்டத்தில் 100 அடி பள்ளத்தில் வீழ்ந்து உழவு இயந்திரமொன்று விபத்துக்கு உள்ளாகியுள்ளது. இதில் சிக்கிய அதன் சாரதி உயிரிழந்துள்ளார்; மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார். அதில் பயணித்த ஏனைய இருவர் தெய்வாதீனமாக உயிர்த்தப்பியுள்ளனர்.

இந்த விபத்து சனிக்கிழமை (29) பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்று உள்ளது. விறகுகளையும் கொழுந்து மூடைகளையும் ஏற்றிச் சென்ற உழவு இயந்திரமே இவ்வாறு விபத்துக்கு உள்ளானது.

விபத்தில் இருவர் தப்பித்த நிலையில் ஒருவர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

உழவு இயந்திரத்தின் ஓட்டுனரான மூன்று பிள்ளைகளின் தந்தை எட்வர்ட் (52 வயது) என்பவரே பலத்த காயங்களுடன் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார். எனினும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# “பிள்ளை வரம் கேட்டன்; மாதா தரவில்லை”

கைது செய்யப்பட்ட நபரிடம் முன்னெடுத்த விசாரணையில், “நான் சைவ சமயத்தை சேர்ந்தனான்; மனைவி கிறிஸ்தவர். இருவரும் திருமணம் செய்து, பிள்ளைகள் கிடைக்காத விரக்தியில் இருந்தேன். அவ்வேளையில் , பிள்ளை வேண்டுமென மாதவிடம் நேர்த்தி வைத்தேன். இருந்தும், பிள்ளை கிடைக்காத விரக்தியில் இருந்தேன். இதனால், ஆத்திரத்தில் மாதா சிலைகளை சேதப்படுத்தினேன்” எனத் தெரிவித்துள்ளார்.

# இப்படியும் நடக்கிறது

இது தொடர்பாக வர்த்தக சங்கத்தின் கூட்டுனர் ஹிசாம் ஹூசைன் தகவல் தருகையில்,

கடந்த 23.07.2023 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, புத்தளம் நகருக்கு அருகில் கிராமமொன்றில் அமைந்துள்ள சிற்றுண்டி நிலையமொன்றின் உரிமையாளருக்கு தொலைபேசி அழைப்பொன்று வந்தது.

அவ்வழைப்பை எடுத்தவர் தன்னை “PHI ரத்திநாயக்க” என அறிமுகம் செய்துகொண்டதோடு இச்சிற்றுண்டி உற்பத்தி நிறுவனத்தை A Grade தரத்துக்கு உயர்த்துவதாகவும் அதற்கான கட்டணமாக ரூ. 17,500 ஐ இன்னுமொரு அலைபேசி இலக்கமொன்றைக் கூறி அவ்விலக்கத்துக்கு Easy Cash செய்யுமாறும் கூறியுள்ளார்.

தனது சிற்றுண்டி உற்பத்தி நிறுவனத்தைத் தரம் உயர்த்துவதற்கு விரும்பிய அந்த உற்பத்தியாளர் தொலைபேசி அழைப்பில் கூறியவாறு ரூ. 17,500 ஐ அந்த நபர் கூறிய தொலைபேசி இலக்கத்துக்கு Easy Cash மூலம் பணம் அனுப்பியுள்ளார்.

அதேபோல் 24ஆம் திகதி புத்தளம் நகரில் ஒரு சிற்றுண்டிச்சாலை ஒன்றுக்கும் PHI ரத்நாயக்க என்ற பெயரில் முன்னைய சம்பவத்தில் தரமுயர்த்துதல் போன்று) தெலைபேசி அழைப்பொன்று வந்துள்ளது.

எனினும், இவ்வாறான தரமுயர்த்தல் - சான்றிதழ் வழங்குதல் - அறிக்கை விநியோகித்தல் போன்ற சேவைகளுக்கான கட்டணத்தை பணத்தை தனிப்பட்ட அலைபேசி இலக்கமொன்றுக்கு செலுத்துதல் குறித்து சந்தேகம் ஏற்பட்ட அச்சிற்றுண்டிச்சாலையின் உரிமையாளர் வர்த்தக சங்க நிருவாக் குழு உறுப்பினரொருவருக்கு இதனை தெரியப்படுத்தினார்.

இது தொடர்பாக புத்தளம் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் பொது சுகாதார பரிசோதகர் (PHI) ஒருவரை சந்தித்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொண்டபோது, அரச நிறுவனங்கள் என்பவை மக்களுக்கு சேவை வழங்கும் நிறுவனங்கள் என்பதனால் மேல்கூறப்பட்டவாறு தரமுயர்த்துதல், சான்றிதழ் வழங்குதல், மற்றும் அறிக்கை விநியோகித்தல் அல்லது அதுபோன்ற பணிகளின்போது பணம் அறவிடுவதில்லை.

அரச நிறுவனமொன்றில் பணியொன்றைப் பெற்றுக்கொள்ளும்போது எச்சந்தர்ப்பத்திலும் தனிப்பட்ட அலைபேசி இலக்கங்களுக்கோ வங்கிக் கணக்குகளுக்கோ பணம் செலுத்த வேண்டாம் என அவ்வதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் அநுராதபுரம், ஆனமடு பகுதிகளிலும் இதே விதமாக பண மோசடி நடைபெற்றதாக தகவல் கிடைத்துள்ளதையும் பொது சுகாதார அதிகாரி குறிப்பிட்டார்.

# “அந்த நிலை உருவாகும்”




அதனைப் பாதுகாப்பதற்கு, அரசியலமைப்பின் 13 வது திருத்தத்தில் உள்ள பறிக்கப்பட்ட பல அதிகாரங்களை மீளப்பெற்று நடைமுறைப்படுத்துவதன் மூலம் எமது இருப்பை ஓரளவு நிலை நாட்ட முடியும் என்று தெரிவித்த அவர், நான் அரசியல்வாதியோ அல்லது அரசியல் கட்சியின் பிரதிநிதியாகவோ எனது செயற்பாடுகளை என்றைக்கும் மேற்கொண்டதில்லை. ஆனாலும் எனக்கு பத்துக்கும் மேற்பட்ட விருதுகளை தந்துள்ளார்கள்.

இலங்கையின் இனப் பிரச்சினைக்கு நீண்ட வரலாறு உண்டு. தமிழ்த் தலைவர்கள் உரிய நேரத்தில் கேட்கவேண்டியவற்றை கேட்காமையின் தவறே இலங்கையில் இனப் பிரச்சினை உருவெடுத்தது என்றார்.

இராமநாதன் தொடக்கம், 50:50 திட்டத்தினை முன்வைத்த காலம் வரையான தலைவர்களின் மகத்தான தவறாகும். அப்போதைய தமிழ்த் தலைவர்கள் கொழும்பை மையமாக கொண்டு வடக்கு, கிழக்கு தமிழர்களின் பிரச்சினையை நோக்கினார்கள்.

கிழக்கு மாகாணம் மூன்று சமூகங்களின் பிரதேசமாக உள்ளது அதிலும் குறிப்பாக முஸ்லிம் சமூகம் தமிழ் சமூகத்திலும் பார்க்க கூடுதலாக காணப்படுகின்றனர். திருகோணமலையில் பெருந்தொகையான தமிழர்கள் முஸ்லிம்களாக மாறிவிட்டார்கள். ஏனெனில், அங்கு தமிழர்களை கவனிப்பார்கள் இல்லை. அவர்களை கவனிப்பதற்கு அதிகாரமும் இல்லை என்றார்.

எமக்கான அதிகாரங்களை பெற்றுக்கொண்டால் நிலங்களையும், கடல் வளங்களையும் பயன்படுத்தி பொருளாரத்தில் பலமடையமுடிவதோடு தொழில் வாய்ப்புக்களையும் உருவாக்கிக்கொள்ள முடியும். எனவே, உரிய முறையில் மாகாணசபை அதிகாரங்களை நடைமுறைப்படுத்த எல்லாக் கட்சிகளும் ஆதரவளிக்க வேண்டும். கல்வியலாளர்கள், பொதுமக்களும் ஆதரவு வழங்க வேண்டும் என்றார்.

மாகாணசபை முறைமை தமிழ் மக்களுக்கான இறுதித் தீர்வல்ல. காலாகாலம் இலங்கை ஜனாதிபதிகள் ஒவ்வொரு தீர்வு முறைமைகளை முன்வைத்தனர். எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் இறுதித் தீர்வை முன் நிபந்தனையாக வைத்தால் சிங்கள ஆட்சியாளர்கள் ஒற்றையாட்சியையே வலியுறுத்துவார்கள்.

இன்னும் 5 வருடங்கள் சென்றால் வடக்கு மாகாணம் தமிழர்களின் மாகாணம் என்று கூறும் நிலை மாறிவிடும். அதற்கு பின் எந்த அதிகாரத்தை கேட்க முடியும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எப்படி கலைப்பீடத்தை தவிர ஏனைய பீடங்கள் பெரும்பான்மையானவர்களுடையதாக மாறியதோ அது போல் வடக்கு மாகாணமும் மாற்றமடையும் என்றார்.

“தமிழ்த் தேசியம் பேசுபவர்கள் தமது சமூதாயத்தின் அபிலாசைகளையும், அவர்களது இருப்பைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். இதுவே அரசியல் தலைவர்களின் கடமை” எனத் தெரிவித்தார்.

# சட்டவிரோத கருத்தரிப்பு அதிகரிப்பு

இதற்கிடையில், சட்டவிரோத கருத்தரித்தல் உள்ளிட்ட பெரும்பாலான தவறுகள் முக்கியமாக அலைபேசிகள் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் ஏற்படும் உறவுகளால் ஏற்படுவதாக அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான தவறுகள் 2020 ஆம் ஆண்டு 34 இடம்பெற்றுள்ளன. 2021 இல் 48 ஆக அதிகரித்தது. இது 41 சதவீதமாகும். 2022 இல் 65 ஆக அதிகரித்தது. இது 35 சதவீத அதிகரிப்பாகும் என்பது பொலிஸ் தலைமையகத்தின் 2022 வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் 2021 இல் 63 சதவீதமாகவும் 2022 இல் 46 சதவீதமாகவும் குறைந்துள்ளது என்றும் பொலிஸ் தலைமையக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஒருசில தமிழ் எம்.பிக்களை சந்திக்கிறார் உயர்ஸ்தானிகர்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தியாவுக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமென இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்திருந்தார்.

இதனை தொடர்ந்து கொழும்பில் இடம்பெற்ற அனைத்துக்கட்சி கூட்டம் எவ்வித தீர்மானமும் இன்றி முடிவுக்கு வந்த நிலையில் இந்திய உயர்ஸ்தானிகர் தமிழ் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

# ஓமந்தை விபத்தில் சாரதி பலி:சாரதி காயம்

இயந்திர கோளாறு கெப் வண்டி வீதியோரத்தில் நிறுத்தப்பட்டுள்ளது. அதனை இழுத்துச் செல்ல வந்த உழவு இயந்திரமும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

அப்போது வவுனியா நோக்கி வேகமாக பயணித்த லொறி, கெப் வண்டி மற்றும் உழவு இயந்திரத்தில் மோதியுள்ளது.

விபத்தில் கெப் வண்டியின் சாரதி மற்றும் உழவு இயந்திரத்தின் சாரதி ஆகியோர் காயமடைந்து நிலையில், வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட கெப் வண்டி சாரதியான தலவாக்கலை கிரேட்வெஸ்ரடன் தோட்டத்தை சேர்ந்த 28 வயதான ராமச்சந்திரன் சதீஷ்குமார் என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

**“ மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதாகவும் ஓமந்தை பொலிஸார் தெரிவித்தனர்**

கைது செய்யப்பட்டுள்ள லொறி சாரதி மதுபோதையில் வாகனத்தை செலுத்தியதாக சந்தேகிக்கப்படுவதுடன் அவர் வவுனியா நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட உள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து காரணமாக கெப் வண்டி மற்றும் உழவு இயந்திரம் ஆகியவற்றுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது என தெரிவித்த ஓமந்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதாகவும் தெரிவித்தனர்.

# தகவல் அறியும் சட்டத்தால் அநேகமானோருக்கு நன்மை

இதில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த காணி உரிமைகளுக்கான செயற்பாட்டாளர்கள், காணிகளை இழந்தவர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் ட்ரான்ஸ்பெரன்சி இன்ரநெஷனல் அபைப்பின் அம்பாறை மாவட்ட திட்ட அலுவலர் எம். லக்ஸ்மிகாந்த் வளவாளராகக் கலந்து கொண்டு செயலமர்வை நடத்தினார்.

**“ மலையக மக்களுக்கு ஆதரவை நல்க வேண்டும் என்ற நோக்கில் இடம்பெறும் ஆதரவுப் பேரணியில் கிழக்கு மாகாண காணி இழந்த முஸ்லிம்களும் இணைந்து கொள்வதென்றும் முடிவெடுக்கப்பட்டது**



அம்பாறை மாவட்டத்திலுள்ள தகவல் அறியும் உரிமைக்கான சேவை மையத்தின் மூலம் இதுவரை சுமார் 750 பேர் சேவைகளைப் பெற்றுள்ளதாகவும் அதில் 400 இற்கு மேற்பட்டோர் கோரிய தகவல் அறியும் உரிமை விண்ணப்பங்கள் வெற்றி அளித்து பொதுமக்கள் தகவல்களைப் பெற்றுள்ளதாகவும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வில் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக தீர்வின்றித் தொடரும் காணி இழந்தவர்களின் பிரச்சினைகளில் முன்னெடுக்கப்பட்ட விடயங்களும் இனிமேல் முன்னெடுக்கவுள்ள விடயங்களும் கலந்தாலோசிக்கப்பட்டன.

13வது அரசியல் திருத்தத்தின் அடிப்படையில் தீர்வுகளை முன்னெடுக்கும் முயற்சிகளில் காணி இழந்து பாதிக்கப்பட்ட மக்களின் முன்மொழிவுகளையும் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், 200 வருடங்களுக்கு மேலாக இலங்கைக்காக இரத்தம் சிந்தி உழைத்து வரும் மலையக மக்களுக்கு ஆதரவை நல்க வேண்டும் என்ற நோக்கில் இடம்பெறும் ஆதரவுப் பேரணியில் கிழக்கு மாகாண காணி இழந்த முஸ்லிம்களும் இணைந்து கொள்வதென்றும் முடிவெடுக்கப்பட்டது.

# ‘மாண்புமிகு மலையக’ பேரணி முருங்கனை நோக்கி பயணமாகும்

இதன் போது மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அங்கு சென்று ஆசி வழங்கிய நிலையில் மன்னார் நகர் நோக்கி அவர்களின் எழுச்சி நடை பயணம் ஆரம்பமானது. காலை 11 மணியளவில் மன்னார் நகரை வந்தடைந்து. பேரணியில் பயணித்தவர்கள், மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயத்தை சென்றடைந்தனர்.

இதன் போது மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை எஸ். அன்ரன் அடிகளார் மற்றும் பணியாளர்கள் இணைந்து வரவேற்றனர்.

மன்னாரில் இருந்து நான்காவது நாள் பயணமாக முருங்கன் நோக்கி திங்கட்கிழமை (31) காலை 6.30 மணியளவில் பயணிக்க உள்ளனர்.

மலையக மக்களின் 200 வருட கால வரலாற்றை நினைவு கூறும் வகையிலும்,மலையக மக்களின் மாண்பை பறைசாற்றும் விதமாகவும் ‘வேர்களை மீட்டு உரிமை வென்றிட’ என்ற தொனிப்பொருளில் ‘மலையக எழுச்சிப் பயணம்’ என்ற மகுடத்தில் மாண்புமிகு மலையக மக்கள் கூட்டிணைவால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 16 நாள் தொடர் நடை பயணத்தின் ஆரம்ப நிகழ்வுகள் க வெள்ளிக்கிழமை (28) தலைமன்னாரில் அமைந்துள்ள புனித லோரன்ஸ் திருத்தலம் முன்பு நடைபெற்றது.

அதன் தொடர்ச்சியாக இரண்டாம் நாளான சனிக்கிழமை (29) காலை 6.30 மணியளவில் தலைமன்னார் புனித லோரன்ஸ் திருத்தலத்தில் இருந்து ஆரம்பமான நடை பயணம், காலை 11 மணியளவில் பேசாலை வெற்றிநாயகி தேவாலயத்தை வந்தடைந்தது.

மலையக மக்கள்,மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், ஏனைய சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், தலைமன்னார் மற்றும் பேசாலை நகரை அண்மித்து வாழும் மக்களின் பங்கேற்புடன் வெற்றிநாயகி தேவாலயத்தை வந்தடைந்த பேரணியை அத் தேவாலயத்தின் அருட்தந்தை வரவேற்றதோடு அதனைத் தொடர்ந்து வழிபாடுகள் இடம்பெற்றன.

இந்நிலையில் மூன்றாம் நாளான ஞாயிற்றுக்கிழமை (30) காலை 6.30 மணியளவில் மீண்டும் பேசாலை வெற்றிநாயகி தேவாலயத்துக்கு அண்மையில் இருந்து ஆரம்பமாகிய நடைபயணம் மன்னார் நகரை வந்தடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**“ மூன்றாம் நாளான ஞாயிற்றுக்கிழமை (30) காலை 6.30 மணியளவில் மீண்டும் பேசாலை வெற்றிநாயகி தேவாலயத்துக்கு அண்மையில் இருந்து ஆரம்பமாகிய நடைபயணம் மன்னார் நகரை வந்தடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது**

# உழவு இயந்திரம் விபத்து; சாரதி பலி: மூவர் தப்பினர்



விபத்து நடந்த இடத்துக்கு முன்பாக விருக்கும் மோசமான பள்ளத்தாக்கான இடதுக்கு உழவு இயந்திரம் வந்ததும் மற்றைய மூவரையும் வாகனத்தை விட்டு இறங்குமாறும் வாகனத்தில் ( பிரேக்) இல்லை எனவும் சாரதி சொல்லிவிட்டு வாகனத்தை செலுத்தியதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் பத்தனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



யாழ்.மாநகர சபையின்

# முத்தமிழ் விழா – 2023














■ எம். றொசாந்த்

யாழ். மாநகர சபையின் ‘முத்தமிழ் விழா- 2023’ நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் யாழ். மாநகர சபையின் ஆணையாளர் இ.த ஜெயசீலன் தலைமையில் சனிக்கிழமை (29) நடைபெற்றது.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சாள்ஸ் பிரதம விருந்தினராகவும் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதன், உள்ளிட்டவர்கள் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.
விழாவில் இயல், இசை, நாடகத் துறைகளில் பெரும் பங்காற்றிய மூவர், யாழ். மாநகர சபையின் உயரிய விருதான ‘அரசகேசரி’ விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இயல் துறைக்கான விருதை கலாபூசணம் கோகிலா மகேந்திரனும் இசை துறைக்கான விருதை கலாபூசணம் எம்.பி. பாலகிருஷ்ணனும் நாடக துறைக்கான விருதை கலாகீர்த்தி சாந்தினி சிவநேசன் ஆகியோர் ஆளுநரிடம் இருந்து பெற்றுக் கொண்டனர்.
இயல், இசை, நாடக அரங்குகளாக நிகழ்ந்த நிகழ்வுகளில், ஈழநல்லூர் நாதஸ்வர இளவரசன் பி.ரஜீந்திரன் குழுவினரின் நாதஸ்வர கச்சேரியும், இசை நாட்டிய நாடக அரங்கில் திருமதி பாலினி கண்ணதாஸின் நெறியாள்கையில் ஏழிசை மிருதங்க நர்த்தனாலயத்தின் ‘வெந்து தணிந்தது காடு’ எனும் நாட்டிய நாடகமும், இயல் அரங்கில் ‘எம் மண்ணில் இன்றைய சூழலில் உயர்கல்வியும் மனிதநேயம், கலாசார பண்பாடுகளும்’ எனும் தலைப்பில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி கோவில் தலைவரும், சைவத்தமிழ் அறிஞருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகனை நடுவராகக் கொண்ட பட்டிமன்றமும் நடைபெற்றது.

பட்டிமன்றத்தில் ச. லலீசன், ந. விஜயசுந்தரம், கு. பாலசண்முகன், ந. ஐங்கரன், தெ. ஹர்சன், த.கருணாகரன் ஆகியோர் பங்கெடுத்தனர்.

தமிழர் பகுதிகளில் காணப்படும்

# எந்தவொரு புதைகுழிக்கும் நீதி கிடைக்கவில்லை

## சட்டத்தரணி சுகாஷ்

■ சண்முகம் தவசீலன்

தமிழர் பகுதிகளில் காணப்படும் எந்தவொரு புதைகுழிக்கும் நீதி கிடைக்கவில்லை. கொக்குத்தொடுவாயும் அவ்வாறு அரங்கேறிவிடக்கூடாது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக பேச்சாளரும் சட்டத்தரணியுமான க. சுகாஷ் தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விவகாரத்துக்கு நீதி கோரியும் சர்வதேச நிபுணத்துவம் மற்றும், கண்காணிப்பை வலியுறுத்தியும் குருந்தூர்மலை விவகாரம் உள்ளிட்ட தமிழர் தாயகத்தில் இடம்பெறும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகவும், வெள்ளிக்கிழமை (28) முல்லைத்தீவில் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: இவ்வளவு காலமும் தமிழர் பகுதிகளில் பல புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால், இன்று வரைக்கும் எந்தவொரு புதைகுழிக்கும் நீதி கிடைக்கவில்லை. ஆனால், கொக்குத்தொடுவாயும் அவை போல் அரங்கேறிவிடக்கூடாது என்பதற்காக, தமிழர் தாயகம் திரண்டு ஹர்த்தாலை அனுஷ்டிக்கிறார்கள்.



இந்த மாபெரும் பேரணியில், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் அழைப்பின் பேரில் கலந்து கொண்டிருக்கின்றோம். இதுதான் தமிழ் மக்களின் உணர்வு; இது தான் எங்களது அபிலாஷை. ஆகவே, இனியும் தாமதிக்காமல் உடனடியாக சர்வதேச விசாரணையை நடத்துவதோடு, கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விவகாரம் தொடர்பில் சர்வதேச தராதரங்களுக்கு அமைவாக, சர்வதேசத்தின் நிபுணத்துவத்தோடு மேலதிக அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். ஐ.நா மன்றம் இனியும் காலதாமதம் செய்யக்கூடாது என கேட்டுக்கொண்டார்.

> “ தமிழர் பகுதிகளில் பல புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால், இன்று வரைக்கும் எந்தவொரு புதைகுழிக்கும் நீதி கிடைக்கவில்லை. ஆகவே, கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விவகாரம் தொடர்பில் சர்வதேச தராதரங்களுக்கு அமைவாக, மேலதிக அகழ்வு பணிகள் முன்னெடுக்கபட வேண்டும். ஐ.நா மன்றம் இனியும் காலதாமதம் செய்யக்கூடாது

# சத்தியப் பிரமாணம்

■ அஸ்ஹர் இப்றாஹீம்



கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீட பட்டதாரியான வரதராஜன் றினோஜி, உயர்நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர், நிந்தவூர் அல் மஸ்லம் வித்தியாலயம், அல் அஷ்ரக் தேசிய பாடசாலை ஆகியவற்றில் பயின்று, உயர்கல்வியை காரைதீவு சண்முகா மகா வித்தியாலயத்தில் தொடர்ந்திருந்தார்.

# யாழில் வாள்வெட்டு




யாழ்ப்பாணம் - திருநெல்வேலி பகுதியில் சனிக்கிழமை (29) அதிகாலை வாள்வெட்டு சம்பவமொன்று நடத்தப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்கள் தங்கியிருந்த வீடு ஒன்றின் மீதே, இரண்டு மோட்டார் சைக்கிள்களில் முகத்தை மறைத்தவாறு வந்த நால்வர், வாள்வெட்டு தாக்குதலை நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

வீட்டின் தளபாடங்கள் மற்றும் ஜன்னல்கள் என்பனவற்றை உடைத்து சேதமாக்கியுள்ளதுடன், தங்கி இருந்த மாணவன் ஒருவருக்கு சிறுகாயம் ஏற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மீமுரே விபத்தில் இருவர் உயிரிழப்பு



■ ஷேன் செனவிரத்ன

மீமுரே கிராமத்தை பார்வையிடுவதற்காக வந்திருந்தவர்களை ஏற்றிக்கொண்டு வந்த வாகனம், சுமார் 50 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்கு உள்ளானதில் இருவர் மரணமடைந்துள்ளனர்.

ரஷ்ய பிரஜையும் (வயது 28) , இலங்கை பெண்ணுமே (வயது 51) இவ்வாறு மரணமடைந்துள்ளனர் என்று உடுதும்பர பொலிஸார் தெரிவித்தனர்.

மீமுரே வீதியில் புஸ்ஸெல்ல பிரதேசத்திலேயே இவ்விபத்து சனிக்கிழமை (29) மாலை இடம்பெற்றுள்ளது.

# ஜப்பான் பயணம்




■ ஏ.எஸ் மௌலானா

ஜப்பானின் டோக்கியோவில் நடைபெறவுள்ள சர்வதேச அபாகஸ் போட்டியில் பங்குபற்றுவதற்காக, இலங்கையில் இருந்து 14 மாணவர்கள் ஜப்பான் பயணமாகியுள்ளனர்.

‘ஐகேம் அபாகஸ்’ (ICAM Abacus) நிறுவனத்தின் ஏழாவது தேசிய அபாகஸ் போட்டியில் சித்தியடைந்தவர்களே, இவ்வாறு ஜப்பான் சென்றுள்ளனர்.

சனிக்கிழமை (29) கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து, மேற்படி நிறுவனத்தின் பணிப்பாளர் திருமதி ஏ.என் பாத்திமா சுக்ரா ஷாபி தலைமையில் மாணவர்கள் பயணமாகினர்.

மக்களின் பிரச்சினைகளுக்கு

# இலகுவானதும் சரியானதுமான தீர்வு காணவேண்டும்



■ எம்.எஸ்.எம் ஹனீபா

இலங்கையில் மத்தியஸ்த சபைகளால் 60 சதவீதமான பிணக்குகளுக்கு தீர்வு காணப்படுவதாக, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை பிரதேச மத்தியஸ்த சபைக்கு நியமிக்கப்பட்டுள்ள புதிய உறுப்பினர்களுக்கான நியமன கடிதம் வழங்கும் வைபவம், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சீ.எம் சாபிர் தலைமையில், அக்கரைப்பற்று மாநகர சபை நீர் பூங்கா மண்டபத்தில் சனிக்கிழமை (29) நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# “கட்டையார் பாலத்தின் பணிகளை துரிதப்படுத்தவும்”



திருகோணமலை மாவட்டத்தில் வெருகல் ஆற்றின் குறுக்கே அமைக்கப்படும் கட்டையார் பாலத்தின் நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்தி, பாலத்தின் பணிகளை நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் பணித்துள்ளார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பூரண மேற்பார்வையின் கீழ், உள்ளூர் ஒப்பந்த நிறுவனத்தால் நிர்மாணிக்கப்பட்டுவரும் இந்தப் புதிய கட்டையார் பாலம், 25 மீற்றர் நீளமும் 5 மீற்றர் அகலமும் கொண்டது. இந்தப் பாலம் அமைப்பதற்கு 50 மில்லியன் ரூபாய் செலவிடப்படவுள்ளது.

# பாரிய இயந்திரம் திருட்டு; இருவருக்கு விளக்கமறியல்



■ ரீ.எல்.ஜவ்பர்கான்

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நாவற்குடா பிரதேசத்தில், பாரிய இயந்திரத்தை திருடிய இரண்டு இளைஞர்களை எதிர்வரும் எட்டாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட பதில் நீதவான் எஸ். தியாகேஸ்வரன் உத்தரவிட்டுள்ளார்.

அனுமார் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சீமெந்து கலவை செய்யும் இயந்திரத்தில் உள்ள இயந்திரத்தை திருடிய குற்றச்சாட்டுகளுக்காகவே நாவற்குடா பிரதேசத்தை சேர்ந்த 21, 22 வயதான இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்ற தடுப்பு பொறுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ எம் எஸ் ஏ ரஹீம் தலைமையிலான பொலிஸ் குழுவினரால் கைது செய்யப்பட்டனர்.


## பதிவுசெய்யப்பட்ட வாகனங்கள் விற்பனைக்கு

| விவரம் | உற்பத்தி செய்யப்பட்ட வருடம் | வாகனசாலை (Yard) |
|---|---|---|
| MAZDA 3 WP KH - XXXX | 2007 | 375/21A, மாகும்புர, பன்னிப்பிட்டிய, கொட்டாவ. |
| MAHINDRA FURIO 14 CC NW LO - XXXX | 2019 | 375/21A, மாகும்புர, பன்னிப்பிட்டிய, கொட்டாவ. |
| TATA TIPER WP LN - XXXX | 2017 | 375/21A, மாகும்புர, பன்னிப்பிட்டிய, கொட்டாவ. |
| CHEVROLET SG KE - XXXX | 2007 | 375/21A, மாகும்புர, பன்னிப்பிட்டிய, கொட்டாவ. |
| TATA XENON3L WP PR - XXXX | 2011 | 375/21A, மாகும்புர, பன்னிப்பிட்டிய, கொட்டாவ. |
| NW JJ – XXXX ASHOK LEYLAND | 2004 | 375/21A, மாகும்புர, பன்னிப்பிட்டிய, கொட்டாவ. |
| WP KD-XXXX BMW X3 | 2005 | 375/21A, மாகும்புர, பன்னிப்பிட்டிய, கொட்டாவ. |

தினமும் காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணிவரை வாகனங்களைப் பார்வையிட முடியும். விற்பனைக்கான கேள்வி மனுக்களை 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31 ஆம் திகதி முதல் பெற்றுக் கொள்ளலாம். கேள்வி மனுக்களுக்கான விண்ணப்பப்படிவத்தை மீளக்கையளிக்கப்படாத தொகை ரூபாய் 300/- செலுத்தி, பான் ஏசியா வங்கி, 135, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு - 06 என்ற முகவரியில் பெற்றுக் கொள்ள முடியும்.

2023 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி மாலை 2.00 மணி வரை மட்டுமே கேள்வி மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேற்குறிப்பிட்ட விவரங்களுக்கான கேள்வி மனுக்களை இரத்துச் செய்வது அல்லது மீளப்பெற்றுக் கொள்வது தொடர்பான பூரண உரிமையும் முகாமைத்துவத்துக்கு உண்டு.

முகாமையாளர் மீளப்பெறல்
பான் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் பிஎல்சி
இல. 135, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு –06
தொலைபேசி: 0114-343130, 0768371340, 0778936453

# நடுவீதிகளில் உயிர்துறக்கும் அப்பாவிகளும் சாரதிகளின் கவனயீனமும்

வீடுகளில் இருந்து வெளியேறி சென்றவர் மீண்டும் உயிருடன் திரும்புவாரா என்ற சந்தேகம், நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் வகையில், வீதி விபத்துகள் அன்றாடம் இடம்பெற்றுக்கொண்டு இருக்கின்றன. சாரதிகளில் ஒருசிலர், வீதியில் வாகனங்களை கண்மூடித்தனமாக செலுத்துவதும் அதிகரித்துள்ளது.

நமது நாட்டை பொறுத்தவரையில், அண்மைக் காலங்களில் வீதி விபத்துகள் அதிகரித்துள்ளன. அவற்றில் மரணமடைவோர், காயங்களுக்கு உள்ளாவோர், அங்கவீனமடைவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. யாரோ ஒருவர் செய்யும் சிறு தவறுக்காக, விபத்தில் சிக்கி மரணமடைவோர் பிள்ளைகளையும் குடும்பத்தையும் அநாதைகளாக விட்டுச்செல்கின்றனர் என்பது மட்டுமே உண்மையாகும்.

அவ்வாறான குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் குடும்ப தலைவிக்கு மற்றுமொரு சுமை தலையில் சுமத்தப்படுகின்றது. இவற்றுக்கெல்லாம் கவனயீனமே பிரதான காரணியாக கண்டறியப்பட்டுள்ளது. 'நில், கவனி, நட' என்று கூறுவார்கள். தற்போதைய காலக்கட்டத்தில் மேலே குறிப்பிட்ட மூன்றையும் மறந்தே பலரும் செயற்படுகின்றனர். எப்படியாவது சென்றுவிடவேண்டுமென்று முந்திக்கொண்டு, அதிகவேகத்துடன் வாகனங்களைச் செலுத்தி, இறுதியில் திரும்பாமலே பலரும் சென்றுவிடுகின்றனர்.

கவனயீனமாக வாகனங்களைச் செலுத்தும் சாரதிகள் மட்டுமன்றி, வீதியில் செல்லும் பாதசாரிகளும் சாரதிகளுக்கு பலிக்கடாவாக்கப்படுகின்றனர். இதற்கிடையே, மதுபோதையில் வாகனங்களை செலுத்துவதால், நடு வீதிகளிலேயே அப்பாவிகளின் உயிர்கள் பறிக்கப்படுகின்றன. மது அருந்தினாலும், இரவு 8 மணிக்குள் சென்றுவிட்டால், வீதிகளில் போக்குவரத்து பொலிஸாரிடம் சிக்கிக்கொள்ளாமல் சென்றுவிடாலம் என்ற நினைப்பு பலரிடம் உள்ளது.

அவ்வாறு இன்றேல், மதுபானத்தை அருந்திவிட்டு, மற்றவர்கள் நுகரும்போது அந்த நாற்றம் வெளிப்படுத்தாத வகையில், வெற்றிலையை குதப்பிக்கொள்கின்றனர்; 'சனிடைசரை' பூசிக்கொள்கின்றனர். அன்றேல், ஏலம், கராம்பு, கறுவா உள்ளிட்ட வாசன திரவியங்களில் ஏதோவொன்றை மென்று கொள்கின்றனர்.

கடந்த ஓரிரு வாரங்களில், நாட்டில் இடம்பெற்ற வாகன விபத்துகளின் எண்ணிக்கை அதிகமாகும். ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், மதுபோதையில் வாகனத்தை செலுத்தியமை, கவனயீனம், அதிக வேகம் ஆகியவற்றை மட்டுமே குறிப்பிட்டுச் சொல்லலாம். அவ்வாறானவர்களுக்கு எதிராக, போக்குவரத்து பொலிஸாரால் எடுக்கப்படும் நடவடிக்கை போதுமானதாக இல்லை.

இல்லையேல், வீதி போக்குவரத்துச் சட்டங்களை மீறி செயற்படும் சாரதிகளுக்கு மட்டுமன்றி, பாதசாரிகளுக்கு விதிக்கப்படும் தண்டனை தொடர்பில் போக்குவரத்துப் பொலிஸார் முறையான தெளிவுப்படுத்தலை மேற்கொள்ளவேண்டும். வீதி சமிக்ஞைகளை முறையாக பின்பற்றாத பாதசாரதிகளை பிடித்து, தேசிய அடையாள அட்டையை பெற்றுக்கொள்ளும் போக்குவரத்துப் பொலிஸார், அவ்வாறானவர்களுக்கு வீதி போக்குவரத்து விதிகள் தொடர்பில் வகுப்புக்களை நடத்தினர்.

தற்போதையை நிலைமையை அவதானித்தால், பிரதான வீதிகளில் வீதி சமிக்ஞை இல்லாத இடங்களில் எல்லாம், 'குறுக்குமறுக்காக' வீதிகளை கடந்து செல்வதை அவதானிக்கலாம். தொற்று நோய், தொற்றா நோய்களில் உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், கவனயீனமாக வாகனங்களை செலுத்துவதால், வீதிகளில் செல்வதால் உயிரிழப்போரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன. இவற்றை கட்டுப்படுத்த, நடவடிக்கை எடுப்பதே சிறந்தது.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

அதிகமாகக் கோபப்படுபவர்களைப் கவனித்தால், தேவையற்ற விடயங்களில், சஞ்சலப்படுபவர்களாகவே இருப்பார்கள். சிலருக்கு எதற்காகக் கோபப்படுகிறோம் என்றே தெரியாது. தொடர்ந்து ஆத்திர உணர்வுடன் தங்களைப் பழக்கி வைத்தால், நேரம், காலம் தெரியாமல் எந்நேரமும் சினந்துகொண்டே இருப்பார்கள்.

நெஞ்சத்தை ஆறுதல்ப்படுத்த தெரியாமல், உணர்ச்சிவசப்பட்டால் குணங்கள் மாறிவிடுகின்றன. தன்னால் மற்றவர்கள் அவஸ்தைப்படுவார்கள் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

கடுமையாக வேலை செய்தால், களைப்பில் சினம் கொள்வதுண்டு. வீட்டில் அமைதி, நிம்மதி, கலகலப்பு, நகைப்பு எல்லாமே முக்கியமானது. இயற்கையை மனிதர்கள் மதிக்க வேண்டும். அன்பு நிரந்தரமாக அமையவேண்டும். சிரிக்கவும் புன்னகைக்கவும் பழகுதல் நல்லது. உணர்ச்சிகளை மிகையாக்கக் கூடாது. கோபம், கவலையைப் பிணைத்துவிடும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்



என்.கே அஷோக்பரன்

# 13ஐ ஏன் தமிழர்களும் சிங்களவர்களும் விரும்பவில்லை?

சமகால இலங்கை அரசியலில் தமிழ் அரசியலும் சிங்கள-பௌத்த அரசியலும் ஒன்றிணையும் புள்ளிகள் மிகக் குறைவு. அதிலும் மிகக்குறிப்பாக அரசியல் அதிகாரப் பகிர்வு தொடர்பில் இணக்கப்பாட்டு புள்ளி என்பது, எங்குள்ளது என்பதே அறியமுடியாததொரு நிலைதான் இருக்கிறது என்றால் அது மிகையல்ல. ஆனால் அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை தமிழ் அரசியலும் விரும்பவில்லை; சிங்கள-பௌத்த அரசியலும் விரும்பவில்லை என்பதை 13 அறிமுகப்படுத்தப்பட்ட 1987இலிருந்து நாம் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இந்த ஒரு புள்ளியில், இரண்டு அரசியலும் சந்தித்துக்கொள்கின்றன. ஆனால், முற்றிலும் வேறான காரணங்களுக்காக!

சுருங்கச் சொன்னால், தமிழ் அரசியலைப் பொறுத்தவரையில், 13ஆவது திருத்தம் அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை வழங்கவில்லை என்ற நிலைப்பாட்டில் 13ஐ நிராகரிக்கிறது. சிங்கள-பௌத்த அரசியலைப் பொறுத்தவரையில், அதிகாரப்பகிர்வு என்பது எதிர்காலத்தில் நாட்டை பிளவுபடுத்தும் என்ற எண்ணத்தில் 13ஐ நிராகரிக்கிறது.

இலங்கையில் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையிலான இனப்பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சியில், 1987ஆம் ஆண்டு, இந்தியாவின் அப்போதைய பிரதமர் ராஜீவ் காந்தி மற்றும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்தன ஆகியோர் கையெழுத்திட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக 13ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டது.

உலகின் பலபகுதிகளிலும் '13' என்ற எண், பொதுவாக துரதிர்ஷ்டவசமாக கருதப்படுகிறது. இலங்கை விடயத்தில், அது மிகப்பெரிய உண்மையாகி இருக்கிறது. 1987இல் அறிமுகமான இலங்கை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம், அறிமுகமான நாள் முதல் சர்ச்சைக்கு உரியதொன்றாகவே இருந்து வருகிறது. அது, இனப்பிரச்சினையின் இருதரப்பில், ஒரு தரப்பைக்கூட திருப்தி செய்யவில்லை.

இத்தனை சர்ச்சைக்குரிய இந்த 13இல் என்னதான் இருக்கிறது? இந்தக் கேள்விக்கு விளக்கமாகப் பதிலளிக்க இந்தப் பத்தி போதாது. அது ஒரு பெரிய ஆய்வுப்பரப்பு. ஆனால், சில விடயங்களை சுருக்கமாக இங்கு குறிப்பிட வேண்டியது, இந்தப் பத்தியின் நோக்கத்துக்கு அவசியமாகிறது.

13ஆவது திருத்தத்தின் மூலம், இலங்கையின் ஒன்பது மாகாணங்களுக்கு, எட்டு மாகாண சபைகளை ஸ்தாபிப்பது என்பதுதான் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் படியிலான 13ஆம் திருத்தத்தின் நோக்கம். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை, வடகிழக்கு மாகாணம் என்று ஒரு மாகாணமாக இணைத்து, மொத்தம் எட்டு மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள், மூன்று பட்டியல்களின் கீழ் (மாகாண, ஒதுக்கப்பட்ட மற்றும் இரண்டுக்கும் உரிய) பிரிக்கப்பட்டன.

அந்தவகையில் மாகாண சபைகள் காணி, பொலிஸ், கல்வி, சுகாதாரம், விவசாயம், வீடு, நிதி ஆகியவற்றில் அதிகாரப் பகிர்வு வேறுபட்ட அளவுகளில், 13ஆவது திருத்தத்தின் கீழ் பெற்றிருந்தது. அதுபோல, தேசிய அளவில் சிங்களத்துடன் தமிழையும் உத்தியோகபூர்வ மொழியாக 13ஆவது திருத்தம் தரமுயர்த்தியது.

சரி! இத்தனை அதிகாரங்களுள்ள அதிகாரப் பகிர்வை, அதிகாரப் பகிர்வு கேட்ட தமிழ் மக்கள் ஏன் நிராகரிக்கிறார்கள்? 13ஆவது திருத்தம் அறிமுகமாகி, 35 ஆண்டுகள் கடந்த பின்னும் கூட, இதுவரை ஒன்றேகால் வருடம் மட்டும் பதிவியிலிருந்த வடகிழக்கு மாகாண சபையும் ஒரே ஒரு வடமாகாண சபையும், இரண்டு கிழக்கு மாகாண சபைகளுமே பதவியில் இருந்துள்ளன.

வடக்கு-கிழக்குக்கு அதிகாரப்பகிர்வு வழங்குவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட 13ஆவது திருத்தம், வடக்கு-கிழக்கில்தான் மிகக்குறைவாக நடைமுறைப்படுத்தப்பட்டு இக்கிறது. ஏனைய மாகாணங்களில் மாகாண சபைகள் தொடர்ந்து இயங்கியிருக்கின்றன.

ஒருவேளை, வடக்கு-கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராக இருந்த வரதராஜப் பெருமாள், தனிநாடு அறிவிப்பு தீர்மானமொன்றை மாகாண சபையில் முன்மொழியாது இருந்திருந்தால், வடகிழக்கு மாகாண சபையின் ஆயுள் திடீரென்று முடிந்திருக்காது என்று சிலர் வாதிடலாம். ஏனென்றால், 13ஐ முதலிலிருந்தே ஐயத்துடன் பார்த்த தெற்கின் பெருந்தேசிய சக்திகளுக்கு, அவர்களின் ஆருடம் உண்மையாகிய உணர்வை வரதராஜப்பெருமாளின் தனிநாடு தீர்மான முன்மொழிவு வழங்கியிருந்தது. நிற்க!

13இல் உள்ள பெருங்குறை, அர்த்தமுள்ளதாக அதன் அதிகாரப்பகிர்வு அமையாமையாகும். இன்றும் மாகாண சபைகளுக்கு முழுமையாக காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. ஆனால், அது பிரச்சினையின் ஒரு பகுதி மட்டும்தான்.

மாகாண சபைகளுக்கு சட்டமியற்றும் அதிகாரத்தைப் போலவே, சட்ட நிர்வாக அதிகாரமும் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த நிர்வாகத்துறை, அம்மாகாண மக்களால் தெரிவுசெய்யப்பட்ட முதலமைச்சர் தலைமையிலான மாகாண அமைச்சரவையால் அமையும் என்பதே பொதுவான நம்பிக்கையாக இருக்கும்.

ஆனால், 13இல் உள்ள பெருங்குறை, நிர்வாகத்துறையானது ஜனாதிபதியால் நேரடியாக நியமிக்கப்படும் ஆளுநர் கையில் இருப்பதாகும். தனது அமைச்சரவையிலுள்ள ஓர் அமைச்சரை மாற்றக்கூட, முதலமைச்சருக்கு அதிகாரமில்லை என்பதை நீதியரசர் சீ.வீ. விக்னேஸ்வரன் - டெனீஸ்வரன் வழக்கு தெளிவாக உணர்த்தியது. அந்த அதிகாரம் கூட, ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஆளுநரிடம் இருக்கும் போது, 13 என்பது ஓர் அதிகாரப்பகிர்வு கட்டமைப்பாக - பிரச்சினைக்குரியதாக அமைகிறது.

ஆனால், இந்தப் பிரச்சினை சட்டத் திருத்தத்தால் மாற்றியமைக்கப்பட வேண்டிய பிரச்சினை என்பதைத்தாண்டி, தெளிவான அரசியல் விருப்பினால் மாற்றியமைக்கப்பட வேண்டியது என்பதை, வலிந்து உணர்த்த வேண்டியதாக இருக்கிறது.

ஐக்கிய இராச்சியம் என்பது, ஒற்றை இறைமையின் கீழ்ப்பட்டதொரு ஒற்றையாட்சி நாடு. 'வெஸ்ட்மின்ஸ்டர்' பாராளுமன்றம் விரும்பினால் ஸ்கொட்லாந்து பாராளுமன்றத்தையும், ஸ்கொட்லாந்துக்கான அதிகாரப் பகிர்வையும் எப்போது வேண்டுமானாலும் இல்லாதொழிக்கலாம். ஆனால், அதனை 'வெஸ்ட்மின்ஸ்டர்' பாராளுமன்றம் ஒருபோதும் செய்யாது என்பதுதான் அங்குள்ள அரசியல் உறுதிப்பாடு.

சட்டத்தை மதிப்பவன், சட்டத்தின் வார்த்தைகளுக்குள் ஓட்டையைத் தேட மாட்டான். மாறாக, சட்டத்தின் தாற்பரியத்தை மதித்து நடப்பான். சட்டத்தை மீற விரும்புகிறவன்தான், அதிலுள்ள ஓட்டைகளைத் தேடி, அது சட்டத்தின் தாற்பரியத்தைத் தோற்கடித்தாலும் பரவாயில்லை என்று நடந்துகொள்வான்.

ஆகவே, 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்த மத்திய அரசு விரும்பினால், அது அதனை சிறப்பாகவே செய்யலாம். ஆனால், அதற்கு அந்த அரசியல் விருப்பும் உறுதிப்பாடும் தேவை. பிரித்தானிய முடியிடம் அதிகாரமிருந்தாலும், அந்த அதிகாரம் பிரதமரின் ஆலோசனைப்படி மட்டுமே செயற்படுத்தப்படும். ஒருபோதும் முடி தன்னிச்சையாக அதைச் செயற்படுத்தாது என்ற ரீதியில், ஆளுநர் அதிகாரம் அணுகப்படும் அரசியல் விருப்பும், உறுதிப்பாடும் இங்கு வந்தால் 13 கூட வெற்றியளிக்கலாம்!

சிங்கள அரசியல் 13ஐ வெறுப்பதற்கு மூல காரணம், அது ஒற்றையாட்சியை மாற்றிவிடும்; ஒரே இறைமை என்பதை இல்லாதாக்கிவிடும்; தனிநாட்டுப் பிரிவினைக்கு வழிவகுத்துவிடும் என்ற அச்சம்தான்.

இந்தத் தீவு, ஒரே இறைமைக்கு உட்பட்டதாக இருந்தது என்பது பெருந்தேசியம் கட்டமைத்துக்கொண்ட நம்பிக்கையாகும். அந்த நம்பிக்கைக்கு சவாலாக, 13 அமைவதாக அவர்கள் கருதுகிறார்கள். இலங்கையின் மிகப்பெரிய 'சிங்கள-பௌத்த' தேசியவாதக் கட்சியாகவும், இனவெறிக்கும் கட்சியாகவும் உள்ள ஜே.வி.பி உயர்நீதிமன்றம் வரை சென்று வடக்கு-கிழக்கு இணைப்பு என்பது சட்டவிரோதமானது. ஏனென்றால், அதற்கான அனுமதிகோரும் சர்வசனவாக்கெடுப்பு கிழக்கில் நடத்தப்படவில்லை என்று வாதிட்டு, வடகிழக்கு என்று ஒரு மாகாண சபையாக ஒன்றிணைக்கப்பட்டதை வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம் என்று இரண்டாகப் பிரித்தது.

இதைச் செய்தது ஜே.வி.பி. அன்றும் அநுரகுமார திஸாநாயக்க அந்தக் கட்சியின் செல்வாக்கு மிக்க தலைவர்களில் ஒருவராக இருந்தார். இன்றும் ஜே.வி.பியின் இந்த நிலைப்பாட்டில் மாற்றமில்லை. ஏனென்றால், பெருந்தேசியச் சிந்தனை என்பது, பிரிவினை அச்சத்தை பெரும்பான்மை மக்களிடையே விதைத்து, அதனை அதிகாரப் பகிர்வுக்கு எதிரான அரசியல் அலையாகத் திரண்டெழச் செய்துள்ளது. இதனால்தான், 13ஐ 'முழுமையாக அமல்படுத்தல்' என்பதே ஏதோ பாதிநாட்டைத் தானம் கொடுப்பது போன்றதொரு காரியமாக, பெருந்தேசியவாதிகளால் பார்க்கப்படுகிறது.

சரி! ஆனால் ஒன்றும் இல்லாததற்கு 13 பரவாயில்லை இல்லையா என்ற யதார்த்தவாதிகளின் குரலில் சில நியாயங்கள் உள்ளன. 13ஐ நீக்கிவிட்டால், அது தமிழர் அரசியலை 70 வருடங்கள் பின்கொண்டு சென்றுவிடும். இன்றுள்ள உலகம் பிரிவினையையோ, பரந்துபட்ட அதிகாரப்பகிர்வையோ இன்னொரு நாட்டின் மேல் வலிந்து திணிக்கும் நிலையில் இல்லை. இந்தப் பூகோள அரசியல் யதார்த்தத்தையும் புரிந்துகொள்வது அவசியமாகிறது.

சமரசம் என்பது விட்டுக்கொடுத்து பெற்றுக்கொள்வதில்தான் இருக்கிறது. சிலதை விட்டுக்கொடுத்து, சிலதைப் பெற்றுக்கொண்டு, பயணத்தைத் தொடர வேண்டும். விட்டுக்கொடுத்தவைகளைப் பெற்றுக்கொள்ள நாளை, இன்னொரு சந்தர்ப்பம் கிடைக்கும்.

அரசியலை ஒரு நீண்ட தொடர்பயணமாக அணுக வேண்டும். வளர்த்தால் 'ஹிப்பி', அடித்தால் 'மொட்டை' என்ற அணுகுமுறை என்பது, சின்னப்பிள்ளைத்தனமாக அரசியல். புரிந்தால் சரி!

## கழிதங்கள்

### மஸ்கெலியாவில் மாயமான கட்டுப்பாட்டு விலை

மஸ்கெலியா மற்றும் சாமிமலை ஆகிய இரண்டு நகரங்களில் உள்ள பல வர்த்தக நிலையங்களில் கட்டுப்பாட்டு விலை இன்றி, பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாகவும் இதனால் தாங்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருவதாகவும் அப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்களும் பெருந்தோட்டத் தொழிலாளர்களும் விசனம் தெரிவிக்கின்றனர்.

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் 10க்கும் மேற்பட்ட பெருந்தோட்டங்களும் நான்கு கிராமங்களும் உள்ளன. பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான மாதாந்த சம்பளம் 10ஆம் திகதி வழங்கப்படும். கொடுப்பனவு மாதாந்தம் 25ஆம் திகதி வழங்கப்படும்.

அத்துடன், அந்த பிரதேசங்களில் சமூர்த்தி மற்றும் முதியோர் கொடுப்பனவுகளை பெறுவோர் பெரும் எண்ணிக்கையில் உள்ளனர். அரசாங்க மற்றும் தனியார் துறைகளில் பணியாற்றும் ஆயிரக்கணக்கானோர் உட்பட பெரும் எண்ணிக்கையிலானோர் தங்களுக்குத் தேவையான பொருட்களை இவ்விரு நகரங்களிலுமே கொள்வனவு செய்கின்றனர்.

இவ்விரு நகரங்களிலும் அங்காடிகள் உட்பட சில்லறை மற்றும் மொத்த வர்த்தக நிலையங்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றிலும் பொருட்களின் விலைகள் வேறுபட்டதாக காணப்படுகின்றன.

இவ்வாறான வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்படுவதில்லை என்றும் நுகர்வோர் குற்றஞ்சாட்டுகின்றனர். ஆகையால், நுகர்வோர் அதிகார சபையின் நுவரெலியா மாவட்ட காரியாலயம், திடீர் சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறும், அதிக விலையில் விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறும் நுகர்வோர் கோரிக்கை விடுகின்றனர்.

காமினி பண்டார இலங்கதிலக்க



# வாழ்க்கைக்கு வழிகாட்டும் திருக்குறள்



கனேஸ்குமார் மதியந்தி
ஊடகக் கற்கைகள் துறை,
இரண்டாம் வருடம்,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

இலக்கியம் என்பது சமூகவிளைவுகளின் காரணி ஆகும். அத்துடன் சமூகவிளைவுக்குமான காரணியாகும். 'அறம் பொருள் இன்பம் அடுக்கி அவ்வத் திறம்பட உரைக்கும்' என கீழ் கணக்கு இலக்கியங்களில் 'ஞாலம் முழுமைக்கும் ஒன்றாய் எந்நாளும் நிலைத்திடும் நூலொன்றும் இல்லை' என்று பாரதியார் கூறியிருந்தாலும் 2000 ஆண்டுகளுக்கு மேல் இதுவரையிலும் 107 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு 1,812 இல் முதன்முதலில் அச்சிடப்பட்ட பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தெய்வநூல், பொதுமறை, முப்பால், தமிழ் மறை, ஈரடி நூல், வான்மறை, உலகப் பொதுமறை என சிறப்பிக்கப்படுகின்ற நூலாக 'திருக்குறள்' விளங்குகின்றது.

பக்தியையும் எழுச்சியையும் மட்டுமே ஊட்டுகின்ற இலக்கியங்கள் எல்லா மனிதருக்கும் வழிகாட்டமுடியாது. ஆனால், திருக்குறள் என்பது தனிமனிதனை முதன்மைப்படுத்தும் இலக்கியம் என்றவகையில் தனிமனிதன், குடும்பம், சமூகம், நாடு, உலகம் என்று பரந்த தளத்தில் வாழ்வியலுக்குரிய அடிப்படையை, அமைதியை விதைப்பதற்குரிய நல்லிணக்க உபாயங்களை தெளிவாக எடுத்துரைத்து நிற்கின்றன எனலாம்.

## தனிமனித வாழ்க்கை

ஒரு மனிதன் தனது வாழ்க்கையில் வெற்றிஅடைவது இலகுவானதா? சிலர் தமது வாழ்க்கையில் நினைத்த காரியத்தில் வெற்றியடையவில்லையே என ஏக்கம் அடைவார்கள். தவிர, தோல்விகளை ஏற்றுக் கொள்வார்களே தவிர, ஏன் தோல்வியடைந்து விட்டோம்? ஏன் நம்மால் மற்றவர்களைப் போல் வெற்றியடைய முடியவில்லை என்பதை சிந்திப்பது அரிதே. இதைதான் திருவள்ளுவர், 'நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும் கெடுநீரார் காமக் கலன்' - அதாவது யார் காரியத்தில் தாமதம், மறதி, சோம்பல், தூக்கம் ஆகியவற்றை தானம் செய்து தன்னம்பிக்கையுடன் முயற்சி செய்கின்றார்களோ அவர்களுக்கு நிச்சயம் ஒருநாள் வெற்றிகிட்டும் என்கின்றார். அதேபோல் ஒரு காரியத்தை செய்ய எண்ணியவர், அதைச்செய்து முடிப்பதற்கு ஏற்ற மனஉறுதி உடையவராக இருந்தால், அடைய நினைத்தவற்றை எல்லாம் அவர் எண்ணியப்படியே அடைவார் என்பதாகும்.

இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக TATA நிறுவனத்தின் அத்திபா Ratan Naval Tata வைக் குறிப்பிடலாம். ஒரு நிறுவனத்துடன் போட்டியிட்டு, முதல் இடத்திற்கு கொண்டு வருவதை விட, முதலிடத்தில் உள்ள நிறுவனத்தை அவ்விடத்திலேயே தக்கவைப்பதுதான் மிகப் பெரியசவால். அந்தச் சவாலை சாத்தியமாக்கியவர் தான் இந்த Ratan Naval Tata. இவர் எந்த முடிவு எடுத்தாலும் அதுசரியாகத்தான் எப்போதும் இருக்கும். இது தொடர்பாக அவர் குறிப்பிடுகையில் "I don't believe in taking right decisions. I take decisions and then make them right"

அதாவது, தான் எடுக்கும் முடிவு சரியானதா என யோசிக்காமல் தான் எடுத்த முடிவு சரியாகதான் இருக்கும் என நடத்திக் காட்டுபவர் தான் இவர். இதையே திருக்குறள் குறிப்பிடுகின்றது. நாம் ஒருகாரியத்தை செய்யும் போது, அதுசரியாக அமையும் என மன உறுதியுடன் செயற்பட்டால், நமதுகாரியம் எண்ணியப்படியே வெற்றிகரமாக அமையும்.

ஒரு மனிதன் வெற்றி அடையலாம்; ஆனால் பிரம்மாண்டமான வெற்றியை அடையவேண்டும் என்றால், நிச்சயம் அவன் பல தோல்விகளை கடந்தே வந்திருப்பான். இதற்கு மனிதனாய் பிறந்த ஒவ்வொருவனும் கொண்டிருக்கக் கூடிய மிக முக்கிய பண்பாக, விடாமுயற்சி விளங்குகின்றது. 'விடாமுயற்சி விஸ்வரூப வெற்றி' என்பதற்கு ஏற்றபடியாக ஒருவன் வெற்றியடைவதற்கு முயற்சி செய்வதைவிட, முயற்சியுடன் செயற்பட்டால் நிச்சயம் அவன் பிரம்மாண்டமான வெற்றியை அடையலாம். இதனையே, 'தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சிதன் மெய்வருத்த கூலிதரும்' என்கிறது.

அதாவது, விதி நமக்கு உதவ முடியாது போனாலும் முயற்சி நம் உடல் உழைப்பிற்கு ஏற்ற பலனை தரும். மனிதன், தெய்வத்தை நம்புவதை விட, தன்னை முதலில் நம்ப வேண்டும். விடாமுயற்சியுடன் செயற்படவேண்டும்

Herry potter எழுதிய J.K. Rawlig Mf ஆக இருக்கட்டும் விமானத்தை கண்டு பிடித்த ரைட் சகோதரர்களாக இருக்கட்டும் KFC யின் தூணான அரவன் சான்டர் எனப் பல சாதனையாளர்கள், ஒரு முறை தோல்வியடைந்ததும் விதியை பழிசொல்லிவிட்டு, தமது முயற்சியை தொடராமல் இருந்திருந்தால், இன்று நமக்கு இவர்கள், முன்னுதாரண புருசர்களாக இருந்திருக்க மாட்டார்கள். ஏன், நமது தோமஸ் அல்வா எடிசனும் அப்படித்தான்!

எனவே, ஒரு மனிதன் பிரம்மாண்ட தோல்வியை சந்தித்து, இன்று வெற்றியாளராக அடையாளம் காண, பிரதான காரணி முயற்சி ஒன்று மட்டும் தான். 'முயற்சி திரு வினையாக்கும்' என்பதைப் போல, 'விடாமுயற்சி வெற்றி தரும்' என்பதை இத்திருக்குறள் வழிகாட்டுகின்றது.

திறமைகள் என்பது அனைவரிடமும் நிறைந்து உள்ளன. ஆனால், அதை செயற்படுத்தும் விதங்களில் தான் உனக்கான இடம் வெற்றியா தோல்வியா என்று அமைகிறது. வெற்றி பெறவேண்டும் என்ற ஓர் எண்ணம் நமக்குள் ஒலித்துக் கொண்டிருந்தாலே, தோல்விகள் எல்லாம் தவிடு பொடியாக மாறிவிடும்.

இந்த உலகத்தில் வல்லவனாக யாரும் பிறந்ததில்லை. தன்னம்பிக்கை என்ற சுடர்தீபம் உனக்குள் எரிந்துகொண்டிருந்தால், இந்த அகிலத்தையே உன் கைகளுக்குள் அடைக்கலாம். வெற்றி என்னும் மைல்கல்லை அடைய துணை செய்யும் மிகசிறந்த ஆயுதமே நம்பிக்கை. அதைமட்டும் வளர்த்துக் கொள்ள, உன்னை முழுவதுமாக தயார்படுத்திக் கொள்ளவேண்டும். எந்த ஒரு செயலை செய்தாலும் அதை 'முடியாது' என்று ஒரு மனது சொல்லிக் கொண்டே இருக்கும். ஆனால், இன்னொரு மனது, 'இதுவெல்லாம் உனக்கு 'சுஜிபிமேட்டர்'; ஈசியாக முடித்துவிடலாம்' என்று சொல்லும். ஆனால், நாம் முடியாது என்று சொல்வதை கேட்டுமனம் தளர்ந்து போய்விடுவோம். அப்படிமட்டும் தளர்ந்துபோய் விடவே கூடாது.

நமக்கு வெளியே மட்டுமல்ல, மனதிற்குள்ளேகூட பலநேரங்களில் போராட்டங்கள் வரும். அதைப்போராடி வெற்றிபெறவேண்டும்.

நாம் தோற்றுப் போகவேண்டும் என்று பலர் நினைத்துக் கொண்டிருப்பார்கள். நம்மை தோற் கடிப்பதற்காக பல வழிகளிலும் சூழ்ச்சிகள் செய்துகொண்டிருப்பார்கள். பலநேரங்களில் நாம் வீழ்ந்துவிடும் நேரங்களில் எல்லாம், அவர்கள் மகிழ்ச்சியோடு கொண்டாடி மகிழ்வார்கள். ஆனால் அதை துளிஅளவும் மூளையில் ஏற்றிக் கொள்ளாதீர்கள்.

என்னதான் நீங்கள் கொண்டாடினாலும் என்னுடைய வெற்றி வெகுவிரைவில் என்ற ஒரு நம்பிக்கை மட்டும் நம்முடைய மனதிற்குள் இருந்துகொண்டே இருக்கவேண்டும். நம்மை வெறுப்பவர்கள் முன்பே, நம்முடைய வெற்றியால் தான் அவர்களுக்கு பதில் கொடுக்கவேண்டும். அந்தஎண்ணம் மட்டும் நம்முடைய மனதைவிட்டு போய்விடவே கூடாது.

எந்த வேலையை நாம் செய்துகொண்டிருந்தாலும் அதை இன்றே செய்து முடித்துவிட வேண்டும். நாளை செய்து கொள்ளலாம் நாளை மறுநாள் செய்துகொள்ளலாம் என்று நினைத்துக் கொண்டிருப்பது நல்ல வீரனுக்கு அழகே கிடையாது. இதைப்பல இடங்களில் பலர் சொல்லி கேள்விப்பட்டு இருப்போம். ஆனால், நம்முடைய நிஜ வாழ்க்கையில் இதை நம்முடைய மூளையில் ஆழமாக பதிய வைத்துவிடவேண்டும். எதைச் செய்யவேண்டும் என்று நினைக்கிறோமோ, அதை உடனே செய்து விடவேண்டும். நாளை ஒருவேலையை செய்யலாம் என்று ஒதுக்கிவைத்து விட்டால், அதுமேலும் உங்களுக்கு சுமையைதான் கொடுக்கும்.

எல்லா நேரங்களிலும் வெற்றி கிடைக்காமல் போய்விடலாம். ஆனால், அந்தவெற்றி நம்மைவிட்டு போனாலும் நமக்கு ஓர் அனுபவத்தை கொடுத்துவிட்டுதான் போயிருக்கும். அந்த அனுபவத்தை வைத்து இழந்த வெற்றியை பல மடங்காக எப்படி மீண்டும் பெறுவது என்பதில்தான் நம்முடைய கவனம் இருக்கவேண்டும்.

'ஐயோ! இது கிடைக்காமல் போய்விட்டதே; இப்படி ஆகிவிட்டதே' என்று நினைத்து வருந்தினால், நம்முடைய முன்னேற்றமும் தடைப்பட்டுவிடும். அதனால் கிடைக்காத வெற்றியையும் நம்முடைய சிறந்த அனுபவமாகப் பயன்படுத்தி, வெற்றியைத் தட்டிப் பறித்துவிடவேண்டும்.

## குடும்பவாழ்வில் நல்லிணக்கம்

38 அதிகாரங்களைகொண்ட அறத்துப்பாலில் 20 அதிகாரங்கள் இல்லறவியலையே பேசுகின்றன. வள்ளுவர் இல்வாழ்வுக்கும் அதற்கு அடிப்படையான குடும்பத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றார்.

தனிமனிதர்கள் சேர்ந்துவாழும் அமைப்பே குடும்பம் ஆகும். தனிமனித ஆளுமை சிதைவுகள், குடும்ப அமைப்பிலும் அதீதசெல்வாக்கு செலுத்துகின்றன. இன்றைய காலத்துக்கும் சமூகத்துக்கும் பொருந்தக்கூடிய பல விடயங்களை அன்று வள்ளுவர் கூறியிருக்கின்றார் என்பது முக்கியமானது.

மனைவியுடன் கூடியிருக்கின்ற இல் வாழ்வான் என்பவனே, எல்லோருக்கும் துணைவனாக இருக்கமுடியும் என்று கூறுகின்றார். அது உறவால் மட்டுமல்ல; அறத்தால் பிணைக்கப்பட்டது என்பதனை 'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை' என்று குடும்ப ஒழுக்கத்தைபற்றி பேசுகின்றார் திருவள்ளுவர்.

## சமூகத்தில் நல்லிணக்கம்

உலகம் கிராமமாகச் சுருங்கி, இயந்திரங்கள் முதன்மை பெற்று, மனிதனின் ஆளுமைகள் சிதைந்துபோகும் உலகத்திலேதான் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். இதனையே வள்ளுவர், தள்ளாவிளையுளும் தக்காரும் தாழ்விலாச் செல்வருஞ் சேர்வது நாடு என உயரிய நிலையை வள்ளுவர் சுட்டுகின்றார்.

அல்லற்பட்டு ஆற்றாது அழும் மக்களின் கண்ணீர், நாட்டை ஆளும் அரசனையும் ஆட்சியையும் அழித்துவிடும் என்று எச்சரிக்கின்றார் வள்ளுவர். சமூகத்தில் இருந்து உருவாகும் நாட்டை ஆளுகின்ற அரசன், மக்களுடன் நல்லிணக்கத்தை பேணவேண்டும் என்பதே வள்ளுவர் கொள்கை.

இப்படி ஒரு மனிதனின் வாழ்க்கைக்கு தேவையான அனைத்து விதமான விடயங்களையும் அன்றே தொகுத்து வைத்துவிட்டார் நம் வள்ளுவர். ஆகவே, மனிதக் கேடுகளும் சமுதாய கேடுகளும் நாட்டின் பிளவுகளும் அரசாங்கத் தலைவர்களின் அதிகார கோலோச்சல்களும் மிகுந்து, துயருற்று மனித இனம் அல்லாடும் இவ்வேளையில், திருக்குறள் ஓர் ஆற்றுப்படையாய் திகழ்கிறது. இனி உன் வாழ்க்கையை எப்படி வாழ போகிறாய்?

# தெற்காசிய பாவனையாளர்களின் சொப்பிங் அனுபவத்தை மேம்படுத்தும் Daraz




Daraz, தெற்காசிய பாவனையாளர்களுக்கு எளிமைப்படுத்தப்பட்ட சொப்பிங் அனுபவத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில், 'AskDaraz' எனும் AI ChatBot ஐ அறிமுகம் செய்வதற்காக Microsoft Azure OpenAI சேவையை பயன்படுத்த உள்ளதாக அறிவித்துள்ளது. OpenAI' இன் ChatGPT இனால் வலுவூட்டப்பட்ட AskDaraz, இனால் பாவனையாளர்களுக்கு AI chatbot உடன் கலந்துரையாடி, பிரத்தியேகமான பரிந்துரைகளைப் பெற்றுக் கொள்ள முடிவதுடன், முழு சொப்பிங் அனுபவத்தையும் சீராக்கிக் கொள்ள முடியும்.

தெற்காசிய பிராந்தியத்தில் 30 மில்லியனுக்கும் அதிகமான பாவனையாளர்களால் Daraz பயன்படுத்தப்படுகின்றது. Azure OpenAI சேவை மாதிரியை Daraz இன் புதிய இனங்காணல் பிரிவினுள் உள்வாங்கி உள்ளதனூடாக, e-வணிக கட்டமைப்புடன் இதுவரையில் தொடர்புகளை பேணியிராத பாவனையாளர்களுக்கு விசேடமாக உள்ளடக்கமான சொப்பிங் அனுபவம் ஏற்படுத்தப்படும்.

'AskDaraz' இனால் Daraz இல் சொப்பிங் அனுபவம் மேம்படுத்தப்படுவதுடன், பல்வேறு பிரிவுகளில் வகைப்படுத்தப்பட்டுள்ள மில்லியன் கணக்கான தயாரிப்புகளிலிருந்து தேவையானதை பரிந்துரைப்பது, பொருட்களை, நவநாகரீக முறைகளை மற்றும் தெரிவுகளை பாவனையாளர்களின் தேவைக்கமைய பரிந்துரைப்பது போன்றன ஏற்படுத்தப்படும். ஒன்லைன் மற்றும் ஓஃப்லைன் சொப்பிங் அனுபவத்தில் காணப்படும் இடைவெளியான, பாவனையாளர்கள் பழக்கப்பட்டுள்ள அதிகளவு உரையாடல்களுடன் மற்றும் ஈடுபாட்டுடனான அனுபவத்தை உயர் தரத்தில் பெற்றுக் கொடுக்கும் வகையில் இந்தச் சேவை அமைந்திருக்கும்.

Daraz கட்டமைப்பிலுள்ள வர்த்தக நாமங்கள் மற்றும் விற்பனையாளர்களுக்கும் 'AskDaraz' இனூடாக பயன் பெறக்கூடியதாக இருக்கும். இதனூடாக தயாரிப்பு தோற்றப்பாடு மேம்படுத்தப்பட்டு, புதிய வாடிக்கையாளர்களை அணுகக்கூடிய வாய்ப்பு வழங்கப்படும். பாவனையாளர்களின் ஈடுபாடுகள் அதிகரிக்கையில், Daraz இனால் தொடர்ச்சியாக, AI சீராக்கம் செய்யப்படும்.

தெற்காசியாவில் காணப்படும் நாடுகளுக்கு, குறிப்பாக பாகிஸ்தான், பங்களாதேஷ் நாடுகளில் காணப்படும் மொபைல் பாவனையாளர்கள் 2025ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 150 மில்லியனாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ள நிலையில், அவர்கள் இலக்கு வைக்கப்பட்டுள்ளனர். இதனூடாக புதிய பாவனையாளர்களில் நான்கில் மூன்று மடங்குக்கு அதிகமானவர்கள் இவர்களாக இருப்பார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளதுடன், e-வணிகம் சாராத பாவனையாளர்களுக்கான அணுகலை வழங்குவதால் இந்தப் புதிய உள்ளடக்கமான சொப்பிங் அனுபவத்தினூடாக, துரிதப்படுத்தப்பட்ட வளர்ச்சி ஏற்படுத்தப்படும்.

Daraz Group, பிரதம நிறைவேற்று அதிகாரி பிஜார்கே மிக்கெல்சன் கருத்துத் தெரிவிக்கையில், "வணிகத்தின் வலிமையினூடாக சமூகங்களை மேம்படுத்துவது எமது நோக்காகும். புதிய சந்தைப் பிரிவை திறக்க தொழில்நுட்பத்தை நாம் பயன்படுத்தும் நிலையில், இது எமக்கு பிரதான மைல்கல்லாகும். எமது சந்தைகளில் ஸ்மார்ட்ஃபோன்களை பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வது மற்றும் எமது app இல் Microsoft Azure OpenAI சேவை போன்றன 'AskDaraz' ஐ பலரை எம்முடன் தொடர்புகளை பேணி கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதற்கு தூண்டும். தெற்காசியாவின் e-வணிகக் கட்டமைப்பை மாற்றியமைக்கும் உரையாடல்களுடனான மற்றும் பிரத்தியேகமான அனுபவத்தை இணைய பாவனையாளர்கள் பெறக்கூடியதாக இருக்கும்" என்றார்.

Microsoft APAC பிரதம தொழில்நுட்ப அதிகாரி டியோமெடெஸ் கஸ்டானிஸ் கருத்துத் தெரிவிக்கையில், "Microsoft Azure OpenAI சேவையுடன் தெற்காசியாவின் விற்பனை பிரிவில் மாற்றியமைக்கும் Daraz இன் பயணத்தில் அங்கம் வகிப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். e-வணிக கட்டமைப்பில் முன்னோடிகளில் ஒன்றாகத் திகழும் Daraz, தயாரிப்பு சென்றடைவு, வாடிக்கையாளர் ஈடுபாட்டை விரிவாக்கம் செய்தல், ஒட்டுமொத்த தன்னிறைவு மட்டங்களை மேம்படுத்தல் போன்றவற்றினூடாக, 30 மில்லியன் வாடிக்கையாளர்களின் பாவனையாளர் அனுபவத்தை மேம்படுத்தவுள்ளது. அத்துடன், app இனுள் தனது ஒன்றிணைக்கப்பட்ட 'Discover' உள்ளம்சத்தினூடாக புதிய வாடிக்கையாளர் பிரிவுகளில் பிரவேசிக்கவும் எதிர்பார்க்கின்றது. விற்பனையாளர்கள் மற்றும் e வணிக கட்டமைப்புகளுக்கு புத்தாக்கத்தை துரிதமாக ஏற்படுத்துவதிலும், AI சக்தியுடன் வாடிக்கையாளர் அனுபவங்களை பிரத்தியேகமானதாக மாற்றியமைப்பதிலும் உதவும் அடுத்தபடியாக இது அமைந்திருக்கும்" என்றார்.

# Kedella Art of Living 2023 கண்காட்சிக்கு செலான் வங்கி அனுசரணை

Asia Exhibitions & Conventions (Pvt) Ltd இனால் ஒழுங்கு செய்யப்படும் கட்டுமான மற்றும் வீட்டு அலங்காரக் கண்காட்சியான Kedella Art of Living 2023 கண்காட்சியின் உத்தியோகபூர்வ வங்கியாளராக தொடர்ச்சியாக 11 ஆவது வருடமும் செலான் வங்கி இணைந்திருந்தது.

Kedella Art of Living 2023 கண்காட்சி ஜூலை 28 முதல் 30 வரை சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த கண்காட்சி நிலையத்தில் நடைபெற்றதோடு, இங்கு செலான் வங்கியானது வீடமைப்பு மற்றும் தனிப்பட்ட கடன்கள், லீசிங் வசதிகள், கிரடிட் கார்ட்கள், டிஜிட்டல் வங்கிச் சேவைகள், மொபைல் ATM உட்பட பலதரப்பட்ட வங்கிச் சேவைகளை வழங்கியிருந்தது.

Asia Exhibitions & Conventions விற்பனை முகாமையாளர் ரொமோத் செஹான், Asia Exhibitions & Conventions முகாமைத்துவப் பணிப்பாளர் டிரோன் சந்திரசேகர, செலான் வங்கி பிஎல்சி விற்பனை சந்தைப்படுத்தல் உதவிப் பொது முகாமையாளர் காமிக டி சில்வா, செலான் வங்கி பிஎல்சி வர்த்தக நாம சந்தைப்படுத்தல் சிரேஷ்ட முகாமையாளர் நலின் கருணாரத்ன ஆகியோரை படத்தில் காணலாம்.



# ‘மீண்டும் பள்ளிக்கூடம் போகலாம்; நம்மை நாம் அங்கு தேடலாம்’

**‘பற்றிக்கோட்டா செமினரி’, ‘யாழ்ப்பாண கல்லூரி’: 200 ஆண்டு நிறைவைக் கொண்டாடிய பழைய மாணவர்கள் – 15 ஜூலை முதல் 22 ஜூலை வரை**



பஸ்தியாம்பிள்ளை
யோண்சன்






தற்போதைய மாணவர்களின் கலைவிழா


நன்றிகூறல் ஆராதனை


காரைநகர், கஷோனா கடற்கரையில்...




‘நமக்குத் திறனுள்ள அனைத்துச் செயல்களையும் செய்து முடித்தால், நம்மை நாமே வியப்பில் ஆழ்த்திக் கொள்ள முடியும்’ என்ற தோமஸ் அல்வா எடிசனின் கூற்றின் உண்மைப் பொருளை உணரவைத்து, வியப்பில் ஆழ்த்திய கிழமையாக, ஜூலை மாதத்தின் மூன்றாவது வாரம் அமைந்திருந்தது.

சனிக்கிழமை 15ஆம் திகதி முதல், 22ஆம் திகதி சனிக்கிழமை வரையிலான எட்டு நாள்களும், வட்டுக்கோட்டை, யாழ்ப்பாண கல்லூரியில் கற்ற மாணவர்கள், தமது மாணவப் பருவத்தின் பசுமையான நினைவுகளையும் கல்லூரி வாழ்க்கையில் சாதித்தவைகளையும் தோல்விகள் தந்த படிப்பினைகளையும் மீட்டுப்பார்த்தார்கள். அந்தவகையில் கல்லூரி வளாகம், கொண்டாட்டங்களுடனும் சித்தாந்தங்களுடனும் களைகட்டிக் காணப்பட்டது.

இங்கு நடைபெற்ற, இடம்பெற்ற நிகழ்ச்சிகளும் நிகழ்வுகளும் சம்பவங்களும் இரண்டு வழிகளில் முக்கியத்துவம் பெறுகின்றன. முதலாவது, பழைய மாணவர்கள் தமக்கிடையிலும் கல்லூரிக்கு இடையிலுமான பிணைப்பை, உணர்வுபூர்வமாக உணர்ந்து கொண்டனர். மற்றையது, கல்லூரியின் செல்நெறி, மட்டமதிப்பு ஆகியவை குறித்து சிந்தித்தனர்.

உலகம் பூராவும் வாழும் பழைய மாணவர்கள் குறிப்பாக, மொன்றியல், ரொரன்டோ, சிட்னி, மெல்பேர்ன், கொழும்பு, வட்டுக்கோட்டை ஆகிய பழைய மாணவர் சங்கங்களின் கூட்டுணர்வுடன் கூடிய நுணுக்கமான திட்டமிடலும் எந்தவொரு சின்ன விடயமானாலும் விருப்பத்துடனும் ஆர்வத்துடனும் முன்வந்து முயலுகையுடன் காரியங்களைச் சாதித்தமையும், பழைய மாணவர்களின் 200 ஆவது ஆண்டு நிகழ்வுகள் கோலாகலமாகப் பூரணத்துவம் பெற்றிருந்தன.

யாழ்ப்பாணக் கல்}ரியின் தாய் நிறுவனம் என்று வரலாற்றில் பதிவாகி இருக்கும், ‘பற்றிக்கோட்டா செமினரி’ 1823ஆம் ஆண்டு ஜூலை மாதம், அமெரிக்க மிசனரியைச் சேர்ந்த டானியல் புவர் என்பவரால் உருவாக்கப்பட்டதையும் பின்னர், 1873ஆம் ஆண்டு ‘யாழ்ப்பாண கல்லூரி’ ஆக மீளஆரம்பிக்கப்பட்டதையும் இந்தக் கல்வி நிறுவனங்கள் இனம், மொழி, மத வாதங்களுக்கு அப்பாற்பட்டு, சமூகமேம்பாட்டுக்காக ஆற்றிய அரிய பணிகளையும் இன்றைய - நாளைய தலைமுறையினரின் சிந்தையில் பதியவைக்கும் வகையில், அனைத்து ஏற்பாடுகளும் ஒருங்கமைக்கப்பட்டு இருந்தன. ஒருங்கமைப்புகள் சிறப்பாக அமைந்திருந்தமையால் கல்லூரியின் நன்மதிப்பு உயர்நிலை அடைந்தது; மாணவர்களும் பெருமிதப்பட்டார்கள்.

குறிப்பாக, யாழ்ப்பாண கல்லூரிக்கே உரித்தான, தனித்துவமான ஒழுக்க விழுமியங்கள், பாரம்பரியங்கள் - பண்பாடுகள், தொட்டுணர முடியாத மரபுரிமை அம்சங்கள், சீரான வரலாறு என்பன, இந்த ஒருவார நிகழ்வுகளின் ஊடாக ‘கல்மேல் எழுத்தாக’ ஒவ்வொருவர் மனதிலும் பதியவைக்கப்பட்டன.

‘இன்று நான் வாழும் கௌரவமானதும் அந்தஸ்து மிக்கதுமான வாழ்க்கைக்கு அடிப்படைக்காரணியாக அமைந்திருக்கும் எனது கல்லூரியின் 200ஆவது நூற்றாண்டு விழாவுக்குச் சென்று, கல்லூரித் தாய்க்கு நன்றிசெலுத்தி, விழாவைச் சிறப்பிக்க வேண்டும்’ என்ற உணர்வு மேலீட்டால், கொழும்பு உட்பட இலங்கையின் பலபாகங்களில் இருந்தும் இந்தியா, கனடா, அமெரிக்கா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா, நியூஸிலாண்ட், ஆபிரிக்கா, அரபு போன்ற நாடுகளில் இருந்து, யாழ்ப்பாண கல்லூரியின் பழைய மாணவர்கள் வருகைதந்திருந்தனர்.

இவர்கள் அனைவருமே, தமது தொழிற்சுமை, குடும்பப் பொறுப்பு போன்றவற்றை ஒருபுறம் ஒதுக்கிவைத்துவிட்டே கல்லூரி வளாகத்தில் ஒன்றுகூடினார்கள்.

சனிக்கிழமை (15ஆம் திகதி) காலையில் வாகனப் பேரணியுடன் ஆரம்பித்த 200ஆவது ஆண்டுக் கொண்டாட்டங்கள், அன்று மாலை, ‘ஹாலா இரவு விருந்துபசாரத்துடனும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை (16), தென்இந்திய திருச்சபையின் யாழ்ப்பாண ஆதீனத்தின் பேராலயத்தில், நன்றிகூறல் ஆராதனை ஒப்புக்கொடுக்கப்பட்டதை அடுத்து, கஷோனா கடற்கரையில் களைகட்டி இருந்தன.

ஆரம்ப தினங்களில் நடைபெற்றிருந்த இந்த இரண்டு நிகழ்வுகளும், அயற்கிராமங்களிலும் பழைய மாணவர்கள் மத்தியிலும் எழுச்சியையும் புத்துணர்ச்சியையும் ஏற்படுத்தியிருந்தன.

17ஆம் திகதி திங்கட்கிழமை, மாலைவேளையில் விசேட முத்திரை மற்றும் அஞ்சலுறை வெளியிட்டு வைக்கப்பட்டதை அடுத்து, தற்போதைய கல்லூரி மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் செவ்வாய்க்கிழமை (18ஆம் திகதி) மாலைவேளை, ‘கல்லூரி வசந்தங்கள்’ திரைப்படமும் புதன்கிழமை (19ஆம் திகதி) மாலைவேளை, கல்லூரியை அடுத்த கட்டத்துக்கு முன்னகர்த்திச் செல்வது குறித்து பழைய மாணவர்களின் கலந்துரையாடலும் வியாழக்கிழமை (20) மாலைவேளை, பழைய மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் திட்டமிட்டவாறு சிறப்பாக நடந்தேறின.

இந்த நான்கு நாள் நிகழ்வுகளுக்குச் சமாந்தரமாக, காலை தொடக்கம் மாலை வரை, ‘பிக்னல்’, ‘பிரவுண்’ மைதானங்களில் பழைய மாணவர்கள் தமக்கிடையில் அணிகளாகப் பிரிந்து, கிரிக்கெட், உதைபந்தாட்டம், ஹொக்கி போன்ற விளையாட்டுகளை விளையாடி மகிழ்ந்தார்கள். அதுமட்டுமல்லாமல், கூடைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், பூப்பந்தாட்டம், டேபிள் டெனிஸ், டெனிஸ், கரம், செஸ், சாக்கோட்டம், கிளித்தட்டு போன்ற விளையாட்டுகளையும் விளையாடி, தமது கல்லூரிக்கால நினைவுகளை மீட்டார்கள்.

வெள்ளிக்கிழமை (21ஆம் திகதி) ‘பிக்னல்’ மைதானத்தில் உணவுத் திருவிழாவும் கிரிக்கெட் போட்டிகளும் இடம்பெற்றிருந்தன. சனிக்கிழமை (22ஆம் திகதி) பரிசளிப்பு வைபவமும் நடைபெற்றது.

## நடை – வாகன பவனி

யாழ்ப்பாணக் கல்லூரியின் வரலாறு, பாரம்பரியங்கள், தொட்டுணரமுடியாத மரபுரிமை அம்சங்கள் போன்றவற்றை பிரசித்தப்படுத்தும் நிகழ்வாக இந்த நடை - வாகன பவனி திகழ்ந்திருந்தது.

சனிக்கிழமை 15ஆம் திகதி காலை ஏழு மணிக்கு, கல்லூரியின் பிரதான வாயிலில் இருந்து புறப்பட்ட வாகனங்கள், கோட்டைக்காடு வழியாக, அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் இருந்து செட்டியார்மடம் செல்லும் குறுக்குத் தெரு வழியாகப் பயணித்து, செட்டியார்மடத்தை அடைந்து, துணைவி செல்லும் குறுக்குத் தெரு வழியாகத் துணைவி சந்தியை சென்றடைந்து, அங்கிருந்து நவாலி ஊடாக ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் கோவிலின் பின்புறமாகச் செல்லும் வீதியில் திரும்பி, மானிப்பாய் சந்தியைச் சென்றடைந்து, சண்டிலிப்பாய், தொட்டிலடி, பண்டத்தரிப்பு, சித்தங்கேணி, மாவடி போன்ற சந்திகள் ஊடாகப் பயணித்து கல்லூரி வளாகத்தை சென்றடைந்தது.

பவனியில் செல்லும் பழைய மாணவர்களை உற்சாகப்படுத்தும் வகையிலும், அவர்களது களைப்பைப் போக்கும் வகையிலும் தண்ணீர், குளிர்பானங்கள், சிற்றுண்டிகள் போன்றவற்றை தமது வீடுகளுக்கு முன்பாகவும் வியாபாரத் தலங்களுக்கு முன்பாகவும் கல்லூரிச் சமூகம் வழங்கியிருந்தது.

ஏறத்தாள 26 கிலோ மீற்றம் தூரம் பயணித்த இந்த வாகனப் பேரணியில் 1,000க்கும் மேற்பட்ட வாகனங்கள் அணிவகுத்திருந்தன. மோட்டார் சைக்கிள்கள், ஒட்டோக்கள், அதிசொகுசு கார்கள் - வான்கள் - பஸ்கள் உட்பட, குடாநாட்டின் தனித்துவத்தை இன்றும் பேணிக்கொண்டிருக்கும் ஏ40, ஒஸ்ரின் கேம்பிரிஜ், ஒற்றை - இரட்டை மாட்டு வண்டில்கள், தட்டிவான்கள் என பழைமையும் புதுமையும் சங்கமித்து, ஏறத்தாள இரண்டு கிலோ மீற்றருக்கும் அதிகமான நீளத்தில் வாகனங்கள் பவனி வந்தன. ஏனெனில், கல்லூரி வளாகத்தை பவனியின் முன்னால் பயணித்த ‘பான்ட்’ வாத்திய குழு சென்றடைந்த பொழுது, மாவடிச் சந்தியையும் தாண்டி பவனி வாகனங்கள் வீதியில் நிறைந்திருந்தன.

“கொலிஜ் கொலிஜ், ஜவ்னா கொலிஜ்” என்ற கோசம், பவனியில் பயணித்த மாணவர்களால் வீதியெங்கும் எழுப்பப்பட்டுக் கொண்டிருந்தது. அத்துடன் ‘பற்றிக்கோட்டா செமினரி’, ‘யாழ்ப்பாண கல்லூரி’ ஆகியவற்றின் சுருக்கமான வரலாறு மற்றும் தற்போது யாழ்ப்பாண கல்லூரியால் முன்னெடுக்கப்படுகின்ற பணிகள், சேவைகள் குறித்தும் விழிப்புணர்வூட்டும் துண்டுப்பிரசுரங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டன. மேலும், 200 வருடகால வரலாற்றுச் சுருக்கத்தை ஆங்கிலம், தமிழ் இரண்டு மொழிகளிலும், வழிநெடுகிலும் ஒலிபெருக்கியில் ஒலிபரப்பப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது!

பவனியில் கலந்துகொண்டவர்கள், யாழ்ப்பாண கல்லூரியின் விழுமியங்களைப் பேணும் பண்பையும் தெளிவாக வெளிப்படுத்தி இருந்தார்கள். குறிப்பாக, பாதையில் செல்லும் வாகனங்களுக்கு இடையூறு விளைவிக்காமல், வீதி விதிகளைப் பேணி நடந்துகொண்டிருந்தமை சிறப்பு!

அத்துடன், பிளாஸ்டிக், பொலித்தீன், பேப்பர் போன்ற கழிவுகளை வீதியில் வீசாது, குப்பைக் கூடைகளைத் தாங்கிய வாகனத்தில் கழிவுகளைப் போட்டு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சுகாதாரம், இயற்கையை நேசிக்கும் மாண்பு போன்றவற்றை சுயமாகவே வெளிப்படுத்தி இருந்தமை மனிதாபிமானம்!

சித்தன்கேணிச் சந்தியில் இருந்து பவனியில் மேலதிகமாக மாட்டு வண்டி, லான்ட் மாஸ்ரர், கன்டர் என்பனவும் இணைந்து கொண்டதுடன் பலர் கால்நடையாகவும் பயணித்தனர். சங்கரத்தை சந்தியில் இருந்து, கல்லூரியின் ‘பான்ட்’ வாத்திய இசைக்குழு இசை எழுப்பியவாறு சென்று, கல்லூரி வளாகத்தை அண்மித்ததும் அது, கல்லூரி கீதத்தை இசைக்க, ‘ஹூறா.....ஹூறா’ ஓசை வானுயர எழுந்தது. இந்தக் கணத்தில் அங்கிருந்த எல்லோர் மத்தியிலும் புத்துணர்ச்சியும் புத்தெழுச்சியும் பரவியிருந்தது.

அன்று மாலை வேளையில், யாழ்ப்பாண நகரத்தில் அமைந்துள்ள நட்சத்திர விடுதியில் பழைய மாணவர்கள் சந்தித்திருந்தார்கள். ‘ஹாலா இரவு விருந்துபசாரம்’ என்ற பெயரில் நடைபெற்ற ஒன்றுகூடலில், பெருந்தொகையான பழைய மாணவர்கள், தங்கள் குடுப்ப அங்கத்தவர்கள் சகிதம் கலந்துகொண்டு, ‘மகிழ்ச்சி’யுடன் ஒருவரையொருவர் அறிமுகப்படுத்திக் கொண்டார்கள். இங்கு, பாடசாலையை சிறப்பான பாதையில் வழிநடத்துவதற்கு ஆளுநர் சபையும் திருச்சபையும் பழைய மாணவர்களும் கல்லூரி நிர்வாகமும் ஆசிரியர்களும் இணைந்து பயணிக்க வேண்டும் என்பதை, அதிபர் திருமதி ருஷிறா குலசிங்கம், வலியுறுத்தி இருந்தார்.

## நன்றிகூறல் ஆராதனை (16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை)

வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள, தென்இந்திய திருச்சபையின் யாழ்ப்பாண ஆதீனத்தின் பேராலயத்தில், நன்றிகூறல் ஆராதனை, பேராயர் கலாநிதி பத்மதயாளன் ஆண்டகை தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. அவரது பிரசங்கத்தில், 200 வருடங்களைக் கடந்த கல்லூரி ‘எவ்வளவோ’ மக்களுக்குச் செய்த கல்விப் பணிகள், சமூகப் பணிகள் என்பவற்றை நினைவுகூர்ந்ததுடன் அதுகடந்து வந்த முட்பாதைகளையும் ‘இரைமீட்டார்’.

காலை ஒன்பது மணிக்கு ஆரம்பித்த ஆராதனையின் நிறைவில் இடம்பெற்ற விருந்துபசாரத்தை அடுத்து, காரைநகர் கஷோனா கடற்கரைக்கு பழைய மாணவர்கள் புறப்பட்டார்கள். இதற்கான பயண ஒழுங்குகளை வட்டுக்கோட்டை பழைய மாணவர்கள் சங்கம் மேற்கொண்டிருந்தது. இங்கு, போட்டிங், பீச்பொலிபோல், கடற்கரை கிளித்தட்டு, ரின்போல் போன்ற விளையாட்டுகளில் பழைய மாணவர்கள் பங்குபற்றியிருந்தார்கள்.

## விசேட முத்திரை மற்றும் அஞ்சலுறை வெளியீடும் தற்போதைய மாணவர்களின் கலைவிழா (17ஆம் திகதி திங்கட்கிழமை)

யாழ்ப்பாண கல்லூரியின் 200 ஆவது ஆண்டை சிறப்பிக்கும் வகையில் விசேட தபால் முத்திரையும் அஞ்சலுறையும் வெளியிட்டு வைக்கும் நிகழ்வு கல்லூரி வளாகத்தில் மாலைவேளை நடைபெற்றது.

விசேடமாக வடிவமைக்கப்பட்ட முத்திரை மற்றும் அஞ்சலுறையை தபால் மாஅதிபர் றுவான் சத்குமார வெளியிட்டு வைத்தார். இதன்பொழுது பாடசாலையின் அதிபர், முன்னாள் அதிபர்கள், தென்னிந்திய திருச்சபையின் பேராயர் ஆகியோர் முத்திரை மற்றும் அஞ்சலுறையை பெற்று கொண்டனர்.

இந்நிகழ்வில், தென்னிந்திய திருச்சபையின் பேராயர் கலாநிதி பத்மதயாளன், கல்லூரியின் அதிபர் ருஷிரா குலசிங்கம், தபால் மாஅதிபர் (செயற்பாடுகள்) ராஜித கே. ரணசிங்க, வடக்கு அஞ்சல் மாஅதிபதி திருமதி மதுமதி வசந்தகுமாரி, யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.ஏ. டி பெர்னாண்டோ, முத்திரை பணியக பணிப்பாளர் லங்காதி சில்வா, நுண்ணாய்வு பரிசோதகர் கே. செந்தில்குமார் எனக் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வின் தொடர்ச்சியாக, தற்போது யாழ்ப்பாண கல்லூரியில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்கள், தமது தனித்துவத் திறன்களை, யாழ்ப்பாண கல்லூரி சமூகத்துக்கு அளிக்கை செய்யும் கலைவிழா சிறப்பாக நடைபெற்றது.


நிகழ்வுகள் ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் இடம்பெற்றிருந்தன. கிராமிய கலை வடிவங்களான வில்லுப்பாட்டு, கூத்து, நாடகம், குதிரையாட்டம், மயிலாட்டம் போன்றவற்றுடன் மேலைதேய நவீன கலைவடிவங்களையும் மேடையேற்றி, பார்வையாளர்களை மாணவர்கள் மகிழ்வித்தனர்.

(நாளை மிகுதி தொடரும்)

படப்பிடிப்பு: திலக்ஷன் ஜெயேஸ்வரன்

மொஸ்கோ

# மொஸ்கோ மீது உக்ரேன் டிரோன் தாக்குதல்



உக்ரேன் - ரஷ்யா இடையேயான போர், நேற்று (30) ஞாயிற்றுக்கிழமையுடன் 522 ஆவது நாளாக நீடித்து வருகிறது. இந்தப் போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். இந்தப் போரில் உக்ரேனுக்கு ஆயுத உதவிகளை அமெரிக்கா உள்பட மேற்கத்திய நாடுகள் வழங்கி வருகின்றன.

போர் தொடர்ந்து நீடித்து வரும் நிலையில் ரஷ்யா மீது உக்ரேன் டிரோன் தாக்குதல் நடத்தியுள்ளது. ரஷ்ய தலைநகர் மொஸ்கோ மீது ஞாயிற்றுக்கிழமை (30) அதிகாலை 3 மணியளவில் உக்ரேன், டிரோன்கள் தாக்குதல் நடத்தியது. இதில் ஒரு டிரோன் சுட்டு வீழ்த்தப்பட்டது. எஞ்சிய 2 டிரோன்களும் மின்னணு ஆயுதங்கள் மூலம் தடுக்கப்பட்டன.

தடுக்கப்பட்ட டிரோன்கள் மொஸ்கோவில் உள்ள சர்வதேச வர்த்தக மைய கட்டடம் மீது மோதின. இதில், யாருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை எனவும், தாக்குதல் முறியடிக்கப்பட்டதாகவும் ரஷ்ய பாதுகாப்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்தத் தாக்குதலை தொடர்ந்து பாதுகாப்பு காரணங்களுக்காக விமான நிலையம் மூடப்பட்டது.

உக்ரேன் எல்லையில் இருந்து ரஷிய தலைநகர் மொஸ்கோ 500 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளமை என்பது குறிப்பிடத்தக்கது.

பிரிட்டன்

# சொக்கலேட் முட்டைகள் திருட்டு



பிரிட்டனை சேர்ந்த 32 வயதான ஜாபி புல் என்ற நபர் இந்த ஆண்டு பெப்ரவரி மாதம், பிரபல கேட்பரி சொக்கலேட் நிறுவனத்திற்குள் புகுந்து 2 இலட்சம் சொக்லேட் முட்டைகளை திருடியதாக குற்றம் சாட்டப்பட்டது. திருடப்பட்ட சொக்லேட் முட்டைகளின் மதிப்பு 4 இலட்சம் அமெரிக்க டொலர் ஆகும்.

குற்றம் நிரூபிக்கப்பட்ட நிலையில் இவருக்கு 18 மாத சிறை தண்டனை வழங்கப்பட்டுள்ளது. பிரிட்டனில் ஒவ்வோர் ஆண்டும் 220 மில்லியன் சொக்லேட் முட்டைகளை கேட்பரி நிறுவனம் விற்பனை செய்து வருகிறது. முட்டை போலவே வெள்ளை மற்றும் மஞ்சள் நிற க்ரீம்களில் தயாரிக்கப்படும் இந்தச் சொக்லேட் தித்திப்பு சுவை கொண்டதாக இருக்குமாம்.

ஈஸ்டர் பண்டிகை காலத்தில் இந்தச் சுவை மிகுந்த சொக்லேட் முட்டைகளை கேட்பரி நிறுவனம் சிறப்பு விற்பனை செய்யும் என்பது குறிப்பிடத்தக்கது.

# இனி ட்விட்டரிலும் பணம் சம்பாதிக்கலாம்

விளம்பரத்தில் கிடைக்கும் வருவாயின் ஒரு பகுதியை உள்ளடக்கத்தை உருவாக்குபவர்கள் அளிக்கும் புதிய திட்டத்தை எக்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

எலான் மஸ்க் ட்விட்டரை வாங்கியதில் இருந்து, அதில் பல அதிரடி மாற்றங்களை செய்து வருகிறார். அவ்வாறு அண்மையில் ட்விட்டருக்கு எக்ஸ் என பெயர் மாற்றம் செய்து அதன் லோகோவையும் மாற்றினார்

புதிய உள்ளடக்கத்தை உருவாக்குபவர்களுக்கு பணத்தை நேரடியாக அளிக்கும் முறையை எக்ஸ் நிறுவனம் ஏற்கெனவே அறிவித்திருந்தது. இதனிடையே வீடியோக்களுக்கு நடுவே வரும் விளம்பரத்தை மக்கள் பார்க்கும்போது கிடைக்கும் வருவாயை கிரியேட்டர்களுக்கும் பகிரும் வசதியை அறிவித்துள்ளது.

விளம்பர வருவாய் பகிரும் திட்டத்தில் பணம் பெற வேண்டுமானால் ஒருவரின் கணக்கு சரிபார்த்திருக்க வேண்டும் என்றும் கடந்த 3 மாதங்களில் ஒன்றரை கோடி பதிவுகளைக் கொண்டிருக்க வேண்டும் என்று எக்ஸ் அறிவித்துள்ளது.



கேரளா

# 11 பெண் தூய்மையாளர்களுக்கு 10 கோடி ரூபாய் பம்பர் பரிசு

கேரளாவில் 11 பெண் துப்புரவு பணியாளர்கள் கூட்டாக சேர்ந்து வாங்கிய லாட்டரிக்கு 10 கோடி ரூபாய் பம்பர் பரிசு விழுந்துள்ளது, அவர்களை அதிர்ச்சியில் உறைய வைத்துள்ளது. என்றாவது ஒருநாள் தங்களது நிலைமை மாறிவிடாதா என்று ஏக்கத்துடன் வாழ்ந்து வந்த இந்த துப்புரவு பணியாளர்களுக்கு லாட்டரி வழியாக அதிர்ஷ்டம், கதவை தட்டியுள்ளது.

கேரள மாநிலம் மலப்புரம் மாவட்டம் பரப்பனகாடி நகராட்சியில் துப்புரவு ஊழியர்களாக பணிபுரிந்து வரும் 11 பேர், வழக்கம் போல தங்களது பணியில் ஈடுபட்டுள்ளனர். அப்போது, அவ்வழியாக வந்த லாட்டரி விற்பனையாளர் ஒருவர், மழைக்கால பம்பர் லாட்டரி வேண்டுமா? எனக் கேட்டுள்ளார். அதற்கு 250 ரூபாய் கொடுத்து லாட்டரி வாங்க தங்களிடம் அவ்வளவு பணம் இல்லை எனக் கூறியுள்ளனர்.

தங்களிடம் இருக்கும் பணத்தை பகிர்ந்து கொடுத்து அனைவரும் கூட்டாக சேர்ந்து ஒரு டிக்கெட் வாங்கினர். அதிலேயே வெற்றி கிடைத்துள்ளது.

சிங்கப்பூர்

# 20 ஆண்டுகளுக்கு பின்னர் பெண்ணுக்கு மரண தண்டனை

20 ஆண்டுகளுக்குப் பிறகு பெண் ஒருவருக்கு போதைப்பொருள் கடத்தல் வழக்கில் தூக்குத் தண்டனையை சிங்கப்பூர் அரசு நிறைவேற்றியுள்ளது.

சமூக நலப் பாதுகாப்பு, ஒழுக்கம் ஆகியவற்றை சுட்டிக்காட்டி, போதைப்பொருள் பரவலை கட்டுப்படுத்துவதற்காக கடுமையான தண்டனைகளை வழங்கி வருகிறது சிங்கப்பூர். இதனால் ஐ.நா.வின் மனித உரிமை அமைப்புகளின் கடும் விமர்சனத்தையும் சந்தித்து வருகிறது

இந் நிலையில், 2018-ல் சரிதேவி டிஜமானி என்ற பெண் 30 கிராம் ஹெராய்னை கடத்தி வந்ததற்காக கைது செய்யப்பட்டார். இவ்வழக்கில் அவருக்கு தூக்குத் தண்டனையை சிங்கப்பூர் அரசு உறுதி செய்தது. இந்த நிலையில், இன்று அவருக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது. இந்த வார தொடக்கத்தில் 50 கிராம் ஹெராய்ன் கடத்தியதற்காக அசிஸ் என்ற இளைஞருக்கு சிங்கப்பூர் அரசு தூக்குத் தண்டனை நிறைவேற்றியது. இந்த நிலையில், இவ்வாரத்தில் இரண்டாவது நபராக சரிதேவி டிஜமானிக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

முன்னதாக, மலேசியாவிலிருந்து சிங்கப்பூருக்கு 1 கிலோ கிராம் கஞ்சா கடத்தப்படுவதற்கு உதவியதாக தமிழ்நாட்டை பூர்வீகமாகக் கொண்ட தங்கராஜு சுப்பையா (46) கைது செய்யப்பட்டார். இது தொடர்பாக அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கில் தங்கராஜு குற்றவாளி என கடந்த 2017-ம் ஆண்டு அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி மரண தண்டனையை உறுதி செய்தது. இது தொடர்பான மேல் முறையீட்டு வழக்குகள் நடந்த நிலையில் கடந்த ஏப்ரல் மாதம் அவருக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### மத்திய பிரதேசம் 12 வயது சிறுமி பாலியல் வன்புணர்வு

# இருவரின் வீடுகள் தகர்ப்பு



மத்திய பிரதேச மாநிலத்தில் சிறுமியை பாலியல் வன்புணர்வு செய்த இரண்டு பேரின் வீடுகளை இடித்து அரசு நிர்வாகம் அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளது. அங்குள்ள மைகார் மாவட்டத்தில் ரவிந்திர குமார் மற்றும் அதுல் படோலியா ஆகியோர் 12 வயது மகளை பாலியல் வன்புணர்வு செய்ததாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இருவரும் கோயிலில் நிர்வாக கமிட்டியில் இடம்பெற்றுள்ளனர். அவர்கள் 12 வயது சிறுமியை ஆசை வார்த்தை காட்டி ரகசிய இடத்திற்கு அழைத்துச் சென்று அவரை பாலியல் வன்புணர்வு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

### இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில்

# இந்தியாவை வென்ற மேற்கிந்திய தீவுகள்



இந்தியாவுக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில், பார்படோஸில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மே. தீவுகள்

இந்தியா: 181/10 (40.5 ஓவ. ) (துடுப்பாட்டம்: இஷன் கிஷன் 55 (55), ஷுப்மன் கில் 34 (49), சூரி யகுமார் யாதவ் 24 (25), ஷர்துல் தாக்கூர் 16 (22) ஓட்டங்கள். பந்துவீச்சு: குடகேஷ் மோட்டி 3/36, றொமாரியோ ஷெப்பர்ட் 3/37, அல்ஸாரி ஜோசப் 2/35, யனிக் கரியாஹ் 1/25, ஜேடன் சியல்ஸ் 1/28)

மே. தீவுகள்: 182/4 (36.4 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஷே ஹோப் ஆ.இ 63 (80), கேசி கார்ட்டி ஆ. இ 48 (65), கைல் மேயர்ஸ் 36 (28) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷர்துல் தாக்கூர் 3/42, குல்தீப் யாதவ் 1/30)

போட்டியின் நாயகன்: ஷே ஹோப்



# ஓய்வு பெறும் ப்ரோட்

தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கும் அவுஸ்திரேலியாவுக்கெதிரான ஐந்தாவது ஆஷஸ் போட்டியைத் தொடர்ந்து இங்கிலாந்தின் முன்னாள் அணித்தலைவரான ஸ்டூவர்ட் ப்ரோட் ஓய்வு பெறவுள்ளார்.

இதுவரையில் 167 டெஸ்ட் போட்டிகளில் 602 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ள வேகப்பந்துவீச்சாளரான ப்ரோட், 3,656 ஓட்டங்களையும் பெற்றுள்ளார். தவிர, ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 178 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ள 37 வயதான ப்ரோட், இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளில் 65 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார்.



### கல்முனை அல்– மிஸ்பாஹ்வின் பழைய மாணவர் கிரிக்கெட், கரப்பந்தாட்டம்:

# மிஸ்பாஹியன்ஸ் காங்க் பாங்க், 2014 டீம் 98 சம்பியனாகின

எம்.என்.எம். அப்ராஸ்

கல்முனை அல்-மிஸ்பாஹ் மகா வித்தியாலய பழைய மாணவர்களுக்கிடையிலான கிரிக்கெட் தொடரில் மிஸ்பாஹியன்ஸ் காங்க் பாங்க் அணியும், கரபந்தாட்டத் தொடரில் 2014 டீம் 98 அணியும் சம்பியனாகின.

பாடசாலை மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இப்போட்டிகளில் கிரிக்கெட் தொடரின் நாயகனாக காங்க் பாங்கின் எஸ்.எம். அலி ரஸாவும், சிறந்த கரப்பந்தாட்ட வீரராக டீம் 98-இன் எம். அஸ்லமும் தெரிவாகினர்.







### வட மாகாண கராத்தே:

# அண்ணனுக்கும் தங்கைக்கும் தங்கப் பதக்கம்

மு. தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தின் உள்ளக அரங்கில் அண்மையில் நடைபெற்ற வடக்கு மாகாண கராத்தே போட்டியில் கிளிநொச்சி மருதகநர் கிராமத்தைச் சேர்ந்த அண்ணனும் தங்கையும் தங்கப் பதக்கங்களை வென்றுள்ளனர்.

கலையமுதன் சௌபர்ணிகா 11வயதுக்குட்பட்டோருக்கான காட்டா போட்டியில் தங்கப்பதக்கத்தை பெற்றுள்ளார்.

இதேவேளை கலையமுதன் பரிதிகன் 21வயதுக்குட்பட்டோருக்கான 'குமிதி' போட்டியில் தங்கப் பதக்கத்தையும், 'காட்டா' போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும் வென்றார்.

கேரளா

# மானக்கேட்டால் சிசுவை கொன்ற பெண்

கேரள மாநிலம் திருவனந்தபுரம் அருகே ஜூலிக்கு திருமணமாகி கடந்த 12 வருடங்களுக்கு முன் கணவர் இறந்து போய் உள்ளார். விதவையான இவருக்கும் அதே பகுதியை சேர்ந்த வாலிபர் ஒருவருடன் பழக்கம் ஏற்பட்டு ஜூலி கர்ப்பம் தரித்துள்ளார்.

குழந்தையின் அழுகுரல் கேட்ட உடன் அதன் வாய் மற்றும் மூக்கை கைகளால் அடைத்து மூச்சை அடக்கி கொலை செய்து வீட்டின் உள்ளேயே குழிதோண்டி புதைத்ததாகவும் தெரிவித்துள்ளார்.

அரியானா

# சோனியாவின் சுவாரஸ்ய பதில்



அரியானா மாநிலம் சோனிபட் பகுதியைச் சேர்ந்த பெண் விவசாயிகளை சந்தித்த ராகுல்காந்தி, அவர்களது விருப்பத்தின்படி, டெல்லியில் உள்ள தமது வீட்டிற்கு அழைத்துச் சென்று விருந்து வைத்தார். அப்போது, அவர்களுடன் சோனியா காந்தி நடனமாடும் வீடியோ வெளியாகி அனைவரையும் கவர்ந்தது.

இந்நிலையில், இதுதொடர்பான புதிய வீடியோவை ஒன்றை ராகுல் காந்தி வெளியிட்டுள்ளார். அதில், ராகுல் காந்திக்கு எப்போது திருமணம் என்று பெண் ஒருவர் வெகுளித்தனமாக கேட்க, அதற்கு பதிலளித்த சோனியாகாந்தி, 'நீங்கள் ஒரு பெண்ணை கண்டுபிடித்து தாருங்களேன்'' என்று பதிலளித்துள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 31 ஜூலை 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.